உ

கடவுள் துணை.

கதிரேசன்பேரில்

ஆனந்தக்களிப்பு.

இதனுள்

கதிர்காமத்துயேசல், கதிர்காமக்கும்மி,

மங்களமும் அடங்கியிருக்கின்றன.

மதுரை ஜில்லா இராமநாதபுரம் சீர்மைசேகரம்

திருப்புல்லாணியிலிருக்கும்

தங்கம்முத்துராமலிங்கம்பிள்ளை அவர்கள்

குமாரராகிய

இராமசாமியாபிள்ளை அவர்கள்

இயற்றியதை,

சென்னைப்புரசை

நாராயணசாமிப்பிள்ளையவர்களது

நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1911. [அணா-2.

16, சரவணப்பெருமாள் முதலிவீதி,

புரசை, சென்னை.

விளம்பரம்.


சுத்தப்பிரதிகள். கிளேஸ்கடிதம்.

		ரூ.	அ.	ப.
நாலாயிரப்பிரபந்தம் இராகதாளத்துடன்		2	0	0
மேற்படி வடகலை	,,	2	0	0
முதலாயிரம்	,,	0	12	0
பெரிய திருமொழி	,,	0	12	0
இயற்பா	,,	0	8	0
திருவாய்மொழி	,,	0	12	0
நித்யாநுஸந்தாநம்	,,	0	8	0
மேற்படி வடகலை	,,	0	6	0
தேசிகப்ரபந்தம்		0	8	0
அஷ்டப்பிரபந்தம்		0	8	0
நித்தியாநுஷ்டானவிதியும், திருவாராதனக்கிரமமும்		0	4	0
திருப்பாவை வ்யாக்யானம்		1	4	0
திருப்பாவை 30-பாசுரம் சரித்திரத்துடன்		0	2	0
ஸ்ரீபகவத்கீதா பாஷ்யார்த்தபோதினீ		1	8	0
மோக்ஷாதிகாரி விலக்ஷண நிர்ணயம்		1	0	0
ஸ்ரீரங்கராஜஸ்தவம்		0	8	0
ஸ்ரீகருடபுராணவசனம் கிளேஸ்		0	8	0
ஷை ரப்பு		0	4	0
கூரேசவிஜயம் பெரிது		1	8	0
விஷ்ணுநாமாவளியும், விஷ்ணுநாமாமிர்தக்கீர்த்தனமும்		0	1	0
நூற்றெட்டுத் திருப்பதி ப்ரபாவம்		0	2	0
திருப்போரூர்ச்சந்நிதிமுறை, காலிகோ பவுண்ட்		0	10	0
விருத்தாசலபுராணம், காலிகோ பவுண்ட்		0	10	0

இப்புத்தகங்களும் இன்னும்பலவித தமிழ், தெலுங்கு, கிரந்த முதலிய புத்தகங்களும் வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதி வி. பி. போஸ்ட் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

ஜாபிதா காட்லாக் பெறவிரும்புவோர் அரை அணா ஸ்டாம்ப் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

☞ பு. நாராயணசாமிப் பிள்ளை,
நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலை,
16, சரவணப்பெருமாள் முதலிவீதி, புரசை, சென்னை.



உ

கடவுள் துணை

கதிரேசன் பேரில்

ஆனந்தக்களிப்பு.

காப்பு.

குருவிருத்தம்.

வெத்திமாமயில் வேலவர் மீதினிற்
சித்தியானந்தச் சிந்துபுகழ்ந்திட
சத்திவாலை யருள் திருமாமத
அத்திமாமுக னைங்கரன் காப்பதாம்.

ஆனந்தக்களிப்பு.

தானனத் தனா தந்த னானா—தந்த
தானா தனா தந்த னாதந்த னானா

சீர்மேவுங்கதிர்காமம் வாழும்-வள்ளி
தெய்வானைமணவாளன மீதிலென்னாளும் க
பார்புகழ்வேனுதி சிறக்க-எங்கள்
பாரமதைபானைமுகன் றன்னருள்பெருக்க உ

தானந்தடனமயிலேறுஞ் - சுவாமி
சரஹணபவானந்தன் மீதிலருள்சேரும் ௩
ஆனந்தக்களிப்பிதனைப் பாட - கையிலே
யாளிமலரடியைநா னனுதினந்தேட ௪
சதுர்முகன்தேவி நயந்தரவே-யிந்தத்
தாரணியினுகந்தகவி வாணர்ஜெயம்பெறவே ௫
கதிர்காமமாநகர் சிறப்பாம்-எங்கள்
கண்ணாருளால்சொன்ன ஆனந்தக்களிப்பாம் ௬
திசைமெய்த்தபுகழ்கொண்டு நாளும்-நல்ல
செல்வமிகுயாபார தர்மமதுவாழும் ௭
வசியகுலநகரத்தார் தானே-வந்து
வணங்குமெங்கள்கதிரேசன் சன்னதியில்நானே ௮
சொன்னகவிதன்னையரங் கேற்ற-வதனில்
சொற்பிழைகள்வாராம லென்னையுமேகாத்த ௯
நன்னயமிகுந்த தெய்வானை-யம்மன்
நற்கமலாடியிணையை நான்துதிப்பேனே ௧௦
அருமறைகள்புகழ்துதிகள் பூணும்-வள்ளி
யம்மையென்கவிதனக் கருள்தரவும்வேணும் ௧௧
குருமுனியைப்பணிந்துகவி கூற-அதற்கு
குறைகளொன்றும்வாராமல் சபையிலரங்கேற்ற ௧௨
சீதையால்ராமனு முன்னாலே-வந்து
தெர்ப்பசயனஞ்செய்த திருப்புல்லாணியிலே ௧௩
நாதனருள்கங்கைகுல சீலன்-தங்கம்
ராமசாமிசொன்ன கவிக்குகந்தவேலன் ௧௪
எச்சரிக்கையென்றிடும்பன் கூற-வந்து
இருபுறமுங்காவடிகள் நின்றுவிளையாட ௧௫
பச்சைமயிலேறியருள் சீலன்-நித்தியம்
பக்ஷம்வைத்தென்கலி யகற்றும்வடிவேலன் ௧௬
தென்கதிர்மாநகர் விளங்க-வந்த
தேவாதிதேவர்ஜெயங் கூறியேமுழங்க ௧௭
அன்பானசன்னதி யிலங்க-கதிரை
ஆறுமுகவேலருட மாபதிதுலங்க ௧௮
முன்னாலேகோபுர முகப்பும-எங்கள்
முருகேசன்கோவில்முழுச் செம்பால்வகுப்பும் ௧௯
அன்னமெனும்தெய்வானை மாடம்-வள்ளியம்மை
யவள்பந்தடித்துவிளை யாடிடுங்கூடம் ௨௰

மூதண்டயோகபதி யேறும்-கதிரை
முத்துலிங்கசுவாமியுட சன்னதியைப்பாரும் ௨௧
நாதமொடுகீதமு முழங்க-வசிய
நகரத்தார்கட்டிவைத்த சத்திரம்விளங்க ௨௨
காணிக்கைகொண்டுவெகு கோடி-ஜனங்கள்
கதிரேசன்சன்னதிக்கி வருவார்கள்தேடி ௨௩
மாணிக்ககெங்கைநீ ராட-இங்கே
மாதவர்களும்மனிதர்களும் வந்துநிதங்கூட ௨௪
பொன்னலங்காரநகர் வாசம்-எங்கும்
புகழ்பெற்றநவரத்ன மேவிளையுந்தேசம் ௨௫
சொர்னமிகுகதிரைவள மெத்த-தோழி
சொல்லுகிறேன்நாட்டுவளம் வானுலகுதித்த ௨௬
இந்திரனுடயேவலதி னாலே-வந்த
ஏழுமேகமுமொன்று கூடியேமேலே ௨௭
சந்திரனெனவாகவுமே வோங்கி-சத்த
சாகரமதில்தாவி தண்ணீரைவாங்கி ௨௮
மாலெனவிசும்பிடை படர்ந்து-முகில்கள்
மண்டியேகெற்சித்து மின்னலுமடர்ந்து ௨௯
நாலுதிசைநாடியே தெளிந்து-கதிரை
நகர்பூமியெங்குமழை மாரிகள்பொழிந்து ௩௰
ஏரிகுளம்வாவிகள் நிறைந்து-வயல்க
ளெங்கெங்குமேகன்னல் சென்னலும்வளர்ந்து ௩௧
வீரியமிருந்தமு தத்தின்-நல்ல
வெண்கமுகுசோலைமலை மேலெங்குந்தோண ௩௨
தனியேபழுத்துதிரு மாவும்-இதனில
தாவியொருகொம்போடே கொக்குகளுமேவும் ௩௩
இனியமலர்வாசனைகள் தேடும்-விறென்
றிருபத்துநாலுகால் வண்டினங்கூடும் ௩௪
நாகமதுநாகமதி லேறும்-துய்ய
நாகமேபுனைந்தசில மாதரையும்பாரும் ௩௫
நாகமலர்சோகுமலர் முல்லை-யிந்த
நாட்டினிலைகலைபகடுக் கொருகொம்புமில்லை ௩௬
முல்லையிருவாட்சிக ளெடுத்து-அந்த
முல்லையிலேயில்லில்லா மடவார்தொடுத்து ௩௭
வல்வினைதீரவெனத் தேடி-பாது
வள்ளிதெய்வானைக் கிடுவார்கள்கோடி ௩௮

சதுர்மறையும்புகழ்தேவ ரிங்கே-வந்து
தான்வாசஞ்செய்கதிரை மாணிக்ககெங்கை ௩௯
இதிலேநீராடுவதும் சித்தி-ஜென்மம்
ஈடேறுஞ்சாயுச்சிய பதவியிலேமுத்தி ௪௰
கோல்மாமலையழகைப் பாரும்-கதிரை
குமரேசனருளாலே வல்வினைகள்தீரும் ௪௧
மூலகணபதிக்கிளைய வாகன்-கதிரை
முத்துலிங்கோருக் கருள்செய்தயோகன் ௪௨
மாமேவும்புலிபுகழுந் தேட்டான்-கதிரை
மகிமைகளைச்சேடனு லளவிடமாட்டான் ௪௩
பூமேவுங்குழல்வள்ளி நேயன்-சுவாமி
புண்ணியன்தேவருக்கும் மனிதருக்கும்நாயன் ௪௪
பச்சைமால்தனக்குமரு கோனே-சுவாமி
பழனிமலைமீதினிலே மேவுமுருகோனே ௪௫
வச்சிராயுதன் தம்பி மருகா-உந்தன்
மலரடியெனக்குநிதந் தரவேணுமுருகா ௪௬
நவவீரர்துணையான குகனே-நம்பி
நாராயணன்றங்கை யபிராமிமகனே ௪௭
நவமணியணிந்த வொளிமூவர்-நின்று
நடனமிடுமயிலேறி யெணவந்துகாவா ௪௮
கனக்குண்டலமிட்ட நீதா-சுவாமி
கார்த்திகேயாலட்சம் படைவீரர்தானே ௪௯
தனமேருபாக்கியமருள் வேலா-எங்கும்
சர்வபரிபூரணு னந்தசிவபாலா ௫௰
ஓராறுமங்கையர்கள் சேயன்-பவனி
ஒய்யாரமாகமயில் மீதுலவுதூயன் ௫௧
ஈராறுபன்னிருகை யாண்டி-புவன
மெங்கெங்குமேதுதி மிகுந்தமெய்யாண்டி ௫௨
ஆண்டிபொன்னாண்டிசிவ னாண்டி-பழனி
யாண்டிமலையாண்டிசிலை யாண்டியிவனாண்டி ௫௩
ஆண்டிமகனாண்டியிவ னாண்டி-நதிகள்
அழகானசாமிமலை திருப்பரங்குன்றாண்டி ௫௪
சிக்கல்புரவச்சேரி யாண்டி-சுவாமி
திருச்செந்தூரெட்டிகுடி குன்றைக்குடியாண்டி ௫௫
மிகத்திருவேரகத் தாண்டி-கதிரை
மேவிவளர்வேல்முருக னறுமுகந்தாண்டி ௫௬

சோலைமலைகழுகுமலை யாண்டி-நல்ல
தோகைமலைவிராலிமலை சென்னிமலையாண்டி ௫௭
வாலையருள்பெற்றவடி வேலா-முனிவர்
மாதவர்க்கேயெந்த நாளுமனுகூலா ௫௮
விடவரவுபடமும்விசை கெடவும்-படியே
வடவரைகள்கிடுகிடென கெஜமுமசைபடவும் ௫௯
கடல்சுவரகதிர்மதி கலங்க-தாவி
களவேகமாகவரு மயில்மீதிலங்க ௬௰
மேலாகிவிளையாடு மெய்யா-வெற்றி
காலாயுதத்தையு மெடுத்தமுருகையா ௬௧
சாலோகசாமீப மென்னும்-சுவாமி
சாரூபசாயுச்சிய பதவியிலேமுன்னும் ௬௨
ஆகவேநின்றபர நாதா-என்னை
ஆதரித்தாளவா வேணுங்குருநாதா ௬௩
தாகமாயிருக்குதுனைக் காண-கந்த
சுவாமிவருவாயெனது கண்ணெதிரேதோண ௬௪
அரகராவேலனே நமாவோம்-சுவாமி
ஆறுமுகமாய்வந்த வடிவேநமாவோம் ௬௫
அரகராமுருகா நமாவோம்-வாலை
யம்பிகைபராசத்தி மைந்தாநமாவோம் ௬௬
அரகராகுகனே நமாவோம்-சுவாமி
அன்பருக்கன்பான பொருளேநமாவோம் ௬௭
அரகராதேவா நமாவோம்-சுவாமி
அகிலபுவனத்திலும் நிறைந்தாய்நமாவோம் ௬௮
மயிலேறுமொயிலா நமாவோம்-பொதிகை
மலைமேவுந்தமிழ்முனிவன் குருவேநமாவோம் ௬௯
மயிலேறுங்கந்த நமாவோம்-வட்ட
வடவாலில்மேவுமால் மருகாநமாவோம் ௭௰
மயிலேறுநாதா நமாவோம்-சுவாமி
மலைமேவும்பரமனுட குருவேநமாவோம் ௭௧
மயிலேறுகின்றாய் நமாவோம்-தங்க
வடிவானவேலது வுகந்தாய்நமாவோம் ௭௨
திரிபுரபவாபவா நமாவோம்-வாலை
சேயனேதிகழொளி பவாவாநமாவோம் ௭௩
பரிபுரபவாவா நமாவோம்-வள்ளி
பாகனேபவநெறி பவாவாநமாவோம் ௭௪

சரஹணபவாவா நமாவோம்-கந்த
சுவாமியேசயலொழி பவாவாநமாவோம் ௭௫
தருமதுரையேநீரு மென்னை-நல்ல
தருணமிதுபாணிந்த வேளையிலேயென்னை ௭௬
காவாவுன்னிரடிகள் தன்னை-நான்
கண்டெனதுகலிதீர வந்துமென்முன்னே ௭௭
வாவென்றசொல்லமன மில்லையா-உமக்கு
வள்ளிதெய்வானைவிடை தந்தனுப்பவில்லையோ ௭௮
தஞ்சமென்றேனே யுனக்கு-எனது
சஞ்சலமெனுங்கலியைத் தீர்ப்பாயெனக்கு ௭௯
அஞ்சறிவுமானதா யகனே-சுவாமி
அகிலாண்டகோடிபிர்ம் மாண்டநாயகனே ௮௰
உன்கிருபைதந்துமேகண் பாரும்-இந்த
உலகமுழுதாள்பவரே யென்கலியைத்தீரும் ௮௧
அன்புபெரும்வரைராஜன் பேரா-சுவாமி
அடியேனுன்னடியிணையைக் காணநீராரா ௮௨
வாவாயென்றேவாநீ யென்றே-சுவாமி
வடிவேலாவாவெனத் தொழுதுநின்றே ௮௩
எவன்றேடினலுந் தேடட்டும்-நமக்
கென்சொல்லிக்கவி பாடினலும்பாடட்டும் ௮௪
நமக்கென்னவென் றிருக்கி றீரோ-சுவாமி
ஞாயமோநானுமுறை யிட்டதறியீரோ ௮௫
உமக்குமனமிரங்காத தேது-எங்க
ளுத்தமிதுரந்தரியின் பாலாயிப்போது ௮௬
ஐயாநீகிருபைசெய்த தாலே-இந்த
அகிலாண்டகோடிபூ மண்டலத்தின்மேலே ௮௭
மெய்யானசரிதையி லனேகர்-அதற்கு
மேலானகிரிகையி லிருப்பவரனேகர் ௮௮
தவயோகக்காரர்வெகு வெள்ளம்-ஞானந்
தங்கியேயிருப்பவர்க ளோமகாவெள்ளம் ௮௯
அவர்களைப்போல்நான்பிறந்த தில்லையோ-சுவாமிக்
காளாகவெனக்குவிதி வயனெழுதவில்லையோ ௯௰
அன்னையவளீன்றெடுத்த கெதியோ-யெனக்கு
ஆதியிலேமுன்னவர்கள் செய்துவந்தசதியோ ௯௧
என்னகுறையிருந்தாலுந் தீர்த்து-உந்தன்
இணையடிக்காளாக வென்னையுமேசேர்த்து ௯௨

ஆளாக்கி யாள லாகாதோ-எந்த
னகந்தணிலே நீயிருந்து வாழலாகாதோ. ௯௩

பாழான மனங்குவியு தில்லையோ- யென்ன
பாவமோ வதிலிருக்கும் பிசகுதெரியலையே ௯௪

வஞ்சகமில்லாமலே கண்பாரும்-முடிவில்
மறலிட தூதரெனை வருத்தாமல்காரும் ௯௫

அஞ்சுதலை யாரருளுந் துரையே - உமக்கு
அஞ்சுதலை யால்வேத னிருந்த துவுட்சிறியே ௯௬

ஆறுதலை கண்டண்டரய்யா-பின்பு
ஆறுதலை யாய்ப்பதியை யாண்டாரேமெய்யா ௯௭

ஆறுபடை வீட்டுக் கதிகாரா-வந்த
அசுரருட னஞ்சாத போர்புரியும்வீரா ௯௮

சத்தியுமை பாலகனே சாமி - எந்தன்
தாசனுக்குத் தாசனெனைக் கார்ப்பதற்கேமி ௯௯

சுத்தபரி பூரண வுன்னை - ஓதி
துதிக்குமடி யார்க்கடிமை யாகவருளென்னை ௱

பொய்யாத வாழ்வருள வேலா-கதிரை
ஐயாவே யெனையாளுந் தேவாதிதேவா ௱௧

ஒய்யார மானமுரு கோனே-வந்த
உற்பவ மெனுந்துதியை செப்புவேனனே ௱௨

உரடான வசுரரிடராலே - தேவ
ரோடிமுறை யிட்டாரே கைலைமலைமேலே ௱௩

அரனசுர் மேல்க்கோப மாகிய கைலை
யாளிவிழி தனிலேயொருபொறிசிதறி யேகி ௱௪

சரஹணப் பொய்கையிலமர்ந்து-அதுவுஞ்
சந்திரோ தயம்போலே பாலனென வந்து ௱௫

உருவாகி மலர்மீதி லானர் - எங்கள்
ஓம்நமசி வாயரெனும் பரமனருள்மகனர் ௱௬

அப்பவே சென்னியோ ராருய்- மெத்த
வழகான செந்திரு புயங்க ளீராருய் ௱௭

உற்பவ மானமணி ரண்டு-விழிகள்
ஒளிவாகியோராறு பெண்கள்பா லுண்டுண ௱௮

அயனையுஞ் சிறையினில் விடுத்தான்-கந்த
னரனுக்கு வுபதேசஞ் சொல்லியேகொடுத்தான் ௱௯

கயமுகா சூரன்முதலோரை - கந்தன்
கைவேலி னலவர்கள் கருவறுத்தாரே ௱௰

தங்கவடி வேலலிங் காரன்-மாது
தெய்வ தெய்வானை மணமேவிசிங்காரன் ௱௰௧

தென்கதிரை மானக ரிலங்கும்-சுவாமி
சிங்காரமா யுனது வருள்கிருபை பொங்கும் ௱௰௨

சித்தமு மகிழ்ந்துவரும் லோலன்-வள்ளி
தெய்வானைக்கிணையான சித்ரமயில் வேலன் ௱௰௩

சத்திவேலாயுதமு முடையான்-பூண்ட
தண்டைகள் கலீரெனவே வந்தருளும் நடையான் ௱௰௪

கடகமெனு மானதிங்களிலே-எங்கள்
கதிரேசன் திருவிழா பவனிவருகையிலே ௱௰௫

கடல்போலே பேரிகை முழங்க-விருது
கட்டிய மிருபுறமு மருகேதயங்க ௱௰௬

செங்காவிப் பட்டாலே கோடி-கொடிகள்
ஜெண்டாவு மாலவட்டக் குடைகள் பலகோடி ௱௰௭

மங்காத சாமரைகள் கோடி - வீசி
வருவார்கள் நடனமிடு மடமாதர்கோடி ௱௰௮

சேர்க்கையாய் முரசுசங் கூத - நல்ல
செந்தீ வளர்ப்பவர்கள் நான்மறையோத ௱௰௯

பார்க்கவெகு மாமுனிவர் வரவே - கவிகள்
பாடியே வரகரா வென்றுபுகழ்பெறவே ௱௨௰

ஆணிப்பொன் மாலைக ளிலங்க-மொய்த்த
அழகானவாலாத்தி தீபமேதுலங்க ௱௨௧

மாணிக்கப் பேழையி லுகந்தார் - கந்தன்
மதயானைமேலேறி யேபவனிவந்தார் ௱௨௨

மதகரியோ வருகிறதைப்பாரும் - சுவாமி
மாணிக்கப் பேழையி லுகந்ததையும்பாரும் ௱௨௩

கதிர்காம திருவிழா நேத்தி-எங்கள்
கந்தனு முகக்கதிரு வாபரணஞ்சாத்தி ௱௨௪

கரியுலவு வனமூடு சென்று-செல்லக்
கதிர்காமம் போய்வந்து நீராடுப்பென்று ௱௨௫

சரியான பௌர்ணமையை நாடி - கந்த
சாமிசங் கீதபரி வாரமுடன் கூடி ௱௨௬

வாரிபோல் பெருகிநீ ரோடி-வார
மாணிக்க கெங்கையிலே வந்துநீராடி ௱௨௭

கூரான வடிவேல் சுமந்து - எங்கள்
குமரேசன் வள்ளிதனை நாடியேயுகந்து ௱௨௮

புள்ளிமயில் வேலர்விரை வாக - சென்று
பூவையெனுங் குறமாது கோவிலுக்குள்ளேக ௱௨௯

வள்ளியம்மை சுவாமிதனைக் கண்டு - வாரு
மணவாள ரென்றடி பணிந்தன்பு கொண்டு ௱௩௰

சித்ரமணி மலரணையில் தாவி - நல்ல
செங்கமலக் கரத்தா லணைத்திலர்கள் மேவி ௱௩௧

கொத்துமுத்து நத்துவளை திருத்தி - யிவர்கள்
குளிர்ந்தகம கமெனமலர் வாசனைகள் பொருத்தி ௱௩௨

இங்கிர்த மணாளகுண நீதா - யெனக்கு
யினியசுக போகமத லீலாவிநோதா ௱௩௩

எங்கள்குலம் விளங்கவந்த நேசா - சுவாமி
யெனக்கிரங்கி யிதுசமயம் வந்தவிலாசா ௱௩௪

அத்தைபெற்ற முத்தேயெங் கோனே - யென்ற
ஆரணங்கை யுபசரித்து தேனேயம்மானே ௱௩௫

முத்திரையிட் டிலங்குகொங்கை யாளே - வள்ளி
மோகனமே யென்றந்த வேலவர்கையாலே ௱௩௬

கலந்தணைந்த சுகந்தமண வாசன் - எங்கள்
கட்டழகி வள்ளிதனை பார்த்துமதபோஜன் ௱௩௭

சலதரத்தைப் பழித்தகுழ லாளே - இந்திர
தனுவோவென் றதிசயிக்கும் புருவநுதலாளே ௱௩௮

எந்தனுக் கிசைந்த மனையாளே - வள்ளி
இந்திரன்மகள் தெய்வானைக் குகந்த துணையாளே ௱௩௯

வந்துவெகுநேரமா குதடி - யெந்தன்
மாதுதெய் வானையெனைத் தேடிடுவாள்நாடி ௱௪௰

போய்வாறேன் விடைதாடி யென்ன - வள்ளி
பூவையவள் கேட்டெந்தன் சாமிநீர்சொன்ன ௱௪௧

வாய்ச்சம்பிர தாயம்வெகு வீச்சு - நான்
போய்வார மென்றுசொன்ன வகைதானென்னபேச்சு ௱௪௨

அங்கேபோய்செலுத்துமதி காரம் - யெந்த
னரண்மனையி லிருந்தாக்கால் நடக்காதோவீரம் ௱௪௩

இங்கேரண்டு நாளிருந்து போனால் - சுவாமி
என்னகுறை வாகிவிடுங் காணுமங்கதனால் ௱௪௪

என்மனையி லிருக்கையிலே யவளேன் உம்மை
யேன்தேடவேண்டியது தானிப்போது ௱௪௫

உண்மையெனக் கின்னதென்று தானே - சுவாமி
உரையுமென வேலவரும் வள்ளியென்மானே ௱௪௬

இங்கேவந்து நானிருப்பதாலே - யென்னை
யெங்கையே வென்றுதெய் வானையொருத்தாலே ௱௪௭

மங்கையருந் தேடுவா ரின்று - யெனக்கு
வள்ளிநீ விடைதாடி போய்வாறேனென்று ௱௪௮

இவர்கூறவள்ளியின்னாளே - சுவாமி
யின்றிரவு யிங்கிருந்து போகலாம்நாளை ௱௪௯

அவசரமுமக்கென்னயங்கே - சுவாமி
ஆனாலும்நீர்போக சம்மதியே நிங்கே ௱௫௰

கூடாது உம்மைவிட மாட்டேன் - மூத்த
குடியாளுக்கஞ்சிநான் பயப்படவுமாட்டேன் ௱௫௧

தேடியிங்கே தெய்வானை வரட்டும் - யென்றும்
செப்புவதும் யொப்பினையும் வள்ளிகைநீட்டும் ௱௫௨

பார்த்தேதடிவள்ளி மானே சற்றும்
பாராம லிம்மொழிக ளேன்சொல்லுவானே ௱௫௩

ஆத்திர முனக்கென்ன போடி - தெய்வ
யானைக்கி நிகராவ ரோர்பெண்கள்கோடி ௱௫௪

சொந்தமாய் கிருபை பாராட்டி - அந்த
தோகையரைப் பருவமதில் நான்மாலைசூட்டி ௱௫௫

வந்தபடி யாலவ ளுனக்கு - முந்தி
வந்தவளு மானதால் நானுமவளுக்கு ௱௫௬

அடக்கமா யிருப்பதுவே சிலாக்கியம் - வள்ளி
ஆனாலுமில்லறத் துக் கதுதானே யோக்கியம் ௱௫௭

மடற்கொடி தெய்வானையவ ளிங்கே - நானும்
வந்தவகை தெரியாது தேடுவாளங்கே ௱௫௮

போகவிடைதாவென வதட்ட -மெங்கள்
பூவையெனுங் குறமாதுக் கதிகோபமூட்ட ௱௫௯

மாகனக மேடையி லிலங்கும் - உமது
மனையாட்டி மூத்தகுடி யாளெனவிளங்கும் ௱௬௰

தெய்வானை சொந்தமாய் போச்சோ-நானுந்
திருட்டுத் தனமாய்வந்த கள்ளிபோலாச்சோ ௱௬௧

கைமாயஞ் செய்தோமே நாங்கள்- ஒருவர்
காணாதே மாலையிட்டு வந்திரோவுங்கள் ௱௬௨

சாதியா ரேசுவா ரோகாண் - நீருந்
தலைமுறையயென்மனைக்கி வருவானேயேன்காண் ௱௬௩

ஆதியிலே யென்னை நினைத்து - வந்த
தறியாளோ தெய்வானை யும்மையுமழைத்து ௱௬௪

கூட்டிவந்த நாரதரைக்கேளும்- வனத்தில்
குளத்தருகி லேயிருந்த காடிபுலிவாழும் ௱௬௫

காட்டினி லுமக்குதவி செய்தார் - வுங்களண்ணன்
கணபதியைக் கேட்டாலுஞ் சத்தியமாய்ச்சொல்வார் ௱௬௬

சிவதலங்கள் செயசபைமுன் னாலே-வைத்து
தெய்வானை யைத்தாலி கட்டினதினாலே ௱௬௭

அவள்மாத் திரஞ்சொந்தக் கிளையோ -சுவாமி
ஆனாலும் நான் கிழக்கு முகமிருக்கவில்லையோ ௱௬௮

வள்ளியிவை சொல்லவே நினைத்து - சென்னல்
வளமான தென்கதிரைவேலனும் நகைத்து ௱௬௯

கள்ளிபோல் வீணில்விரை யாதே-பொல்லாக்
கசடான குறவருட சாதியொளியாதே ௱௭௰

ரெண்டுசமு சாரமா காது - யென்று
நீணிலத்திற் சொல்லுவது சரியானதோதோது ௱௭௧

வண்டார்குல மானையுனை நாடி - வந்த
மணவாளனுக் கெதிர்கள் பேசலாமோடி ௱௭௨

நில்லுநான் போய்வரே னென்று-சொன்ன
நினைவரிந்துவள்ளியவள் சீறியெதிர்நின்று ௱௭௩

வல்லப முமக்கென்ன காணும்-எனக்கு
வகைசொல்லி யப்பாலே நீர்போகவேணும் ௱௭௪

என்சமர்த்தைப் பாருமினி யென்றே-வள்ளி
இடைதனிலேசேலையை யிறுக்கியெதிர்கொண்டே ௱௭௫

அன்புற நெருங்குவது கண்டார்-வள்ளி
அப்பாலே நில்லென்று சொல்லுகிறேனென்றார் ௱௭௬

சொல்லுகிற சமாச்சார மென்ன - உமது
தொழிலைநான் னெடுகிலு மறிந்துன்னி யென்ன ௱௭௭

நல்லதினி மேற்கொண்டு பார்ப்போம் - உமது
ஞாயமதை தேவசபை யிலேசொல்லிகேழ்ப்போம் ௱௭௮

தேவசபை யிலேசொல்லிப்பாரு-அவற்கு
தெரியுமடி தினைப்புனத்தில் நீயிருந்தசீரு ௱௭௯

ஓவியமே உன்னுறுதி கேட்க - யெழுதும்
உடன்பிடிக்கை முறியுண்டோ கொண்டாடிப்பார்க்க ௱௮௰

உடன்பிடிக்கை முறியெழுதித் தாறேன் - வள்ளி
யுனக்கேவல் செய்வதற்கு உன்பிறகேவாறேன் ௱௮௧

கட்டிக்கொவ்வைத் தள்ளாதே மானே - யென்று
கட்டிமுத்த மிட்டது கசப்பேறுவானே ௱௮௨
தனியே வனத்திலிரு பேருங் - கூடுஞ்
சையோக வேளையிலே பார்த்தென்னைநீரும் ௱௮௩
இனியசெந் தேனோகற் கண்டோ-உந்த
னிதழென்று சொன்னது வுமில்லையோவுண்டோ ௱௮௪
முன்னிருந்த யினிப்பென்ன போச்சோ-யிப்போ
மூத்தகுடி யானுமக்கு சர்க்கரைபோலாச்சோ ௱௮௫
என்னைநீர் வசைசொல்வ தேனோ - சுவாமி
யென்குலத்தை நீரிகழ்ந் தும்பேசுவ துமேனோ ௱௮௬
தன்னைஉங்கள் தேட்டையெடுத் தாரோ - யெங்கள்
சாதியார் வந்துநிதந் தின்றுகெடுத்தாரோ ௱௮௭
எத்தனைக் குறைகளே துண்டோ - சுவாமி
இழுக்கொத்த சாதியிலு மில்லாமலுண்டோ ௱௮௮
மங்களகல் யாணமதில் நல்லால் - அந்த
மணவறையிலென் தகப்ப னிட்டநகையல்லால்
உங்களிடம் வந்தநாட் கொண்டோ - யெனக்கு
ருத்திராட்ச வடத்துக்கொரு நவமணியுமுண்டோ ௱௯௰
மாதிவையுரைக்கமுத் தையன் - வள்ளி
மங்கைதனைப் பார்த்தேது சொல்வார்மெய்யன்
ஏதடிநீ பேச்சதிகங் கொண்டாய் - வள்ளி
யென்னுடைய சாதியி லிழுக்கென்னகண்டாய் ௱௯௨
குபேரன்மகள்போல பேசாதே -நொப்பன்
கொடுத்துவிட்ட வரிசைகளை வெளியேசொல்லாதே ௱௯௩
சபையார்க ளென்னவறி யாரோ - யிந்த
தாரணியி லுள்ளவர்க ளெவருமறியாரோ ௱௯௪
உடுத்திவந்த துணிக்கிவேறுண்டோ - களிம்பு
ஊறிய பித்தளை யோலைக்கிவேறுண்டோ ௱௯௫
தொடுத்திருந்த கருகமணியோடே - யென்னை
துடர்ந்துவரும் போதுனக் கேதுபட்டாடை ௱௯௬
வண்ணார்கள் வெளுக்காத கலையுஞ் - சுத்த
வாணியர்கள் யெண்ணையிட் டறியாததலையும் ௱௯௭
புண்ணைக்கு போயிழுக்கு வேலுங் - காட்டில்
புரண்டிசெடி முள்ளிழுத்து சுரண்டிவிட்டகாலும் ௱௯௮
எப்போதுங் காய்கிழங்கு தின்று - நீயும்
இருந்தகெதி தெரியாதோ வரும்போதென்பின்னும் ௱௯௯

அப்பவே நானழைத்து தந்து - நல்ல
வாபரண மானதையு மழகாயணிந்து ௨௱

செம்பவழ மாளிகை யமைத்து-உனக்கு
செங்கமலத் தாதிகளை யேவல்நேமித்து ௨௱௧

நம்பிநான் செய்ததை மறந்து - வள்ளி
நாயகமே பேசுவது மென்னடியிகழ்ந்து ௨௱௨

மாதேநீபதறாதே வாடி - யெந்தன்
மனமுழுது மறியாமல் சொல்லாதேபோடி ௨௱௩

கோதையே யிதுவென்ன மூர்க்கம் - உங்கள்
கூறறிந்து சொல்லுகிறேன் குறவருடமார்க்கம் ௨௱௪

சாராயங் கள்ளுகள் குடித்து-குறவர்
சந்திக்கி சந்தியே சண்டைகள் பிடித்து ௨௱௫

பூராயம் தெரியாமற் கத்தி கண்ட
பூனைகளை யெரவாற முசலென்று குத்தி ௨௱௬

தின்பதுவு முண்டதிக மாக - குறவர்
சேரியிலே நீபழகி வந்ததவைப்போக ௨௱௭

செம்பவள வாயாளே யென்று - சுவாமி
செப்பவேவள்ளியவள் வெஞ்சினங்கொண்டு ௨௱௮

விண்ணணம் பேசுவது சீரோ - சுடலை
மீதிலெலும் பானதுவை தின்றதுவுமாரோ ௨௱௯

கண்ணப்ப னெச்சிதிங் கலையோ - சிவனுங்
கரிக்காகப் பாலகனைக் கொன்றதுவுமில்லையோ ௨௱௰

புத்தியுமக் கில்லாதே போமோ - கெட்ட
புனக்குறவர் பெண்ணைநீர் சம்மதிக்கலாமோ ௨௰௧

யெத்திசையும புகழ்பெற்ற நாதா வென்று
யிவள்சொல்லும் வசைகண்டு கூறுவார்தோதா ௨௰௨

அடங்கேரு வார்குடிமி குந்தால் குறவர்
அவர்தனக் கேசிலவுக் கில்லாதிருந்தால் ௨௰௩

கடன்வாங்கு வர்சம்மதித்து - தாலி
கட்டிய பெண்டுகளை யீடாகவைத்து ௨௰௪

குடுத்துவிட்ட பணத்துக் கீடாக - வைத்த
குறத்திகளைப் பணங்கொடுத்த குறவன் வெகுவாக ௨௰௫

அடுத்தவளைய லனுதினமுங்கூடி -யிவர்கள்
அஞ்சாறு பிள்ளைகளைப்பெற்றபின்னதடி ௨௰௬

பணங்கொடுத்து திருப்புகிற போது-பெற்ற
பாலரையுங் கூடவே கூட்டியவள்போது ௨௰௭

குண்மாக முன்னீடு வைத்த-பழைய
குறவனுடன் போவதுங்கள் சாதிமெத்த ௨௧௮

இதுபுதுமை இவ்வுலகிலுண்டோ-வள்ளி
யேந்திழையீ யிதைவிட லெச்சைவேறுண்டே ௨௧௯

கதிகொண்ட மயில்வாகனத்தார்-இந்தக்
கதைசொல்லவே வள்ளியவ ளெதிருரைத்தாள் ௨௨௰

குறத்தியென்று யெனக்குவசை புரியுஞ்-சுவாமி
கும்பமுனி யாலுங்கள் சேதிகொஞ்சந்தெரியும் ௨௨௧

மறந்தீரோ நீரறிந்ததில்லையோ -நொப்பன்
மலைவேடன் மகளைப்போய் மாலையிட்டதில்லையோ ௨௨௨

சிந்தைமகிழ்ந் தொருபெண்ணைத் தூக்கி-உங்கள்
சிவன்தலையில் வைத்துமே சுமந்துக்குச்சாட்சி ௨௨௩

நந்திகேசு பரர்சொல்லக்கேட்டேன்-சுவாமி
ஞாயனிச மில்லாமல் நான் சொல்லமாட்டேன் ௨௨௪

ஆட்டுக்கா லதனை யெடுத்தார்-உங்க
ளப்பனென் றவனிமுழு தெங்கும்பழித்தார் ௨௨௫

கேட்டப்பா ருமதுதாய் ஐயோ-ஒற்றை
மாட்டுக்காரனைவைத் திருந்ததுவும்பொய்யோ ௨௨௬

கண்ணு யிரங்கொண்டநேத்திநொம்மான்
பெண்ணுசை கொண்டல்லோ வந்தவபகீர்த்தி ௨௨௭

பெண்ணொருவர் கொடுக்காததெதினால்-நொண்ணன்
பெருவயறு கொண்டுவழுக் கரையிலிருந்ததினால் ௨௨௮

அண்ணனுமே மத்தாளங் கொட்ட - சொந்த
அருமைமரு மகனின்று கைத்தாளந்தட்ட ௨௨௯

விண்ணவர்கள்கூடியே நகைக்க - வந்த
வேதியரும் மாதவருங் கண்டுபிரமிக்க ௨௩௰

தேவடியாள் போலுமது வன்னை - கூடுந்
தேவசபை யிலேயின்று ஆடலையோமுன்னே ௨௩௧

பாவலருக் கருள்புரியுஞ் சீலா- யிதையும்
பார்த்தவர்கள் சிரியாரோ தங்கவடிவேலா ௨௩௨

பத்மாசூரனுக்கு மிகப்பயந்து உங்கள்
பரமசிவ னோடலையோ காட்டுவழிநுழைந்து ௨௩௩

கைப்பொருளு மில்லாமல் தேகி -யென்று
கைப்பிச்சை வாங்கலையோ பரமசிவயோகி ௨௩௪

கும்பமுனிக்கருள்புரிந் தோரே-யென்று
கூவியே வள்ளிசொல்லு மொழிகளறிந்தாரே ௨௩௫

தென்பான பெண்மோக வள்ளி - யிந்த
சீமையிலே திருடிவந்தான் குறவர்குலக்கள்ளி ௨௩௬
குறிசொன்ன வனக்குறவக்காதி - வகைகளை
கூறுகிறேன் சொல்லுகிறேன் கேளுமவர்சேதி ௨௩௭
சதிர்பொருந்த் திருவிழாக் கடையில் - சனங்கள்
சந்தடிகளாகவே சயனிக்குமிடையில் ௨௩௮
கூசாமல் கூடவே படுத்து - தூக்கம்
குலையாமல் பணிதிகளைக் கழற்றியேயெடுத்து ௨௩௯
பேசாமலேபோவது கண்டு குறத்தி
பெரியதனக் காரர்களுமேபிடித்துக்கொண்டு ௨௪௰
வம்பிலே தலையினைக் கட்டி - குறத்தி
மார்பிலே போடுவார் சொல்லென்றுகிட்டி ௨௪௧
செம்பாணி கொண்டுமே யிருத்தி - அவர்கள்
சேலையை யுரித்தம்மணமாகவே நிறுத்தி ௨௪௨
அடி தண்டமாகவே யடிப்பார் - குறவர்
அப்பாவு மெடுக்கவில்லை யென்றுமே நடிப்பார் ௨௪௩
தடியடிக்கு யசையாச சாதி - குறவர்
சங்கைகெட்டு நிற்பார்கள் தெரியுமவர்சேதி ௨௪௪
என்றிவ ருரைக்கவுமே மாது - சுவாமிக்
கெதிராக நின்றேது சொல்வாளப்போது ௨௪௫
தொண்டர்தொழு மின்றமயிலேறுஞ் - சுவாமி
சொல்லுவேனுங்கள்குல வளமைகளைப்பாரும் ௨௪௬
அடையாளஞ்சொல்லுகிறேன் கேளும் - நல்ல
ஆவினங்கள்கூடிவரு மாப்பாடிவாழும் ௨௪௭
இடையருட வளவிலென்னாளும் - உறியி
லிருந்தவெண்ணை திருடினதை யாரென்றுகேளும் ௨௪௮
அன்றுடன் சோலையறிந்து - வந்து
ஆவினங்கள் கட்டுகிற கட்டுல்வரிந்து ௨௪௯
ஒன்றாக மாதரொரு பங்கை - கூடி
உரலோடே கட்டினதைச் சொன்னாலும்வெட்கம் ௨௫௰
கட்டுண்ட தும்ரோசமில்லையோ - பெண்கள்
கட்டிய சேலைகளைக் களவாண்டதில்லையோ ௨௫௧
வெட்டிய சமர்க்களத்திலேரும் - கிருஷ்ணன்
விசயனுட குதிரைகளை மேய்க்கலையோ நீரும் ௨௫௨
மேய்த்துதிற கஞ்சிகளை யேத்தார் - கிருஷ்ணன்
மேய்க்காலி மாட்டையெல்லாங் கட்டிடமேமேய்த்தார். ௨௫௩

கூத்தசிக ருண்டின்னம் ரொம்ப - சொல்லக்
கூசுதே யென்மனமு மென்று வள்ளியம்ப ௨௫௪
கேட்டுவடி வேலவர்கை நீட்ட - வள்ளி
கேளடியுங்களுட வீடுகளைக் காட்டில் ௨௫௫
நீட்டியிரு கால்களை நிறுத்தி - அதனில்
நெட்டுமுட் டாகவளை கட்டியேபொருத்தி ௨௫௬
நத்திய கயற்றால் வரிச்சு - மழைக்கு
நனையாமல் மூங்கிலிலை யாலமேய்ந்த குச்சு ௨௫௭
சத்திவைத்த சுவரெல்லா மோட்டை - யசந்து
அணங்கவும் விடாதங்கே முணுமுணுத்தமுட்டை ௨௫௮
ஆடேறி மேயுமதில் தொல்லை - வீட்டில்
அஞ்சுபேர் தனக்கதிக மிருக்கவிடமில்லை ௨௫௯
மூடாத வாசல்களைக் கண்டு - பார்த்து
மூடினுவ சரவொரு முகட்டொழுக்குமுண்டு ௨௬௰
தேடாத பொருள்சிலவுகாணும் - வைத்த
தீபமுந் தெரியாது தோணுமல் தோணும் ௨௬௧
கூடாது குறவிட்டை நம்ப - சற்றே
குந்தவைக்க முடியாது நசுநசுப்புரொம்ப ௨௬௨
குறம்பாடிக் கஞ்சிகளை வாங்கும் - உங்கள்
குறவருட பக்ஷியெல்லாங் கூரையிலே தூங்கும் ௨௬௩
வரம்பேது மில்லையென் றுரைக்கும் - என்று
வடிவேலர் சொல்லவே வள்ளியின்னுரைக்கும் ௨௬௪
தமக்கென்று சிறுகுடிசை கட்டி - குறவர்
தானிருப் பதுவேவகை யில்லாதகெட்டி ௨௬௫
உமக்கொரு தலத்தினிலும் நாடி - சுவாமி
ஒண்டயிட மில்லாமல் மலைக்குமலையோடி ௨௬௬
கையிலரைக் காசுமே யில்லாமல் - வீடு
கட்டியே குடியிருக்க வகையுமறியாமல் ௨௬௭
வெய்யிலிலும் வேனிலிலுங் காய்ந்து - சுவாமி
மெத்தவருஷிந்தமழை பனியால்கனிந்து ௨௬௮
இருப்பதுவைக் கண்டு மனம் வாடி - உமக்கு
யிவ்வுலகி லுள்ளவர்க ளெல்லோருங்கூடி ௨௬௯
சிறக்கவே கோவில்க ளமைத்து - உமக்கு
செம்பொன்மணி யாபரணம் விருதுகளமைத்து ௨௭௰
வடிவேலவாவென்று யெண்ணி - உமக்கு
வரிசையிட்டுவைத்தார்கள் பிரதிஷ்டைபண்ணி ௨௭௧

அடியவர்கள் புண்ணியமீ தையா - நீரும்
அழகான சோலைகளி லிருக்கிறது மெய்யா ௨௭௨

தேருமத கரிபரியு மிரவல்-உமக்கு
செயமேள பேரிகையுங் காவில்களுமிறவல் ௨௭௩

ஏறுமயில் வாகனமு மிரவல்-உமக்கு
இட்டநவ ரதனமணி யாபரணமிரவல் ௨௭௪

இத்தனையு முமக்கிரவல தானே-குறவர்
இருப்பிடத்தைப் பழிக்கிறீ ரேனுமல் வீணே ௨௭௫

வெற்றிவே லதுதானே சொந்தம்-உமக்கு
வேறேயொரு ஆஸ்திகளின் மேலென்னசொந்தம் ௨௭௬

மச்சமுனி மறைபொருளா னாலும்-உங்கள்
வங்கிஷ வகுப்புகளைச சொன்னாரேகேளும் ௨௭௭

மச்சானே மனைபோது வேதன்-உமக்கு
வாய்த்தவொரு மாமனே அளவனந்த தாதன் ௨௭௮

ஆத்தாளோ பாலுநப் பறச்சி - அவளுக்
கருமையுள்ள தமையனும வளர்த்தவளுமிடைச்சி ௨௭௯

தாத்தாவோ மீன்காரக் கரவன்-உமக்கு
தளகர்த்த னவனும நல்லகுலமறவன் ௨௮௦

அரனொரு மையீன்ற தய்யா சங்க
மாணடியலலோ சாதியிலலை சொல்வார்கள்மெய்யா ௨௮௧

வரமுறைக ளில்லாத நாட்டம்-உங்கள்
வங்கிஷங்கள் தெரியாதோ பலசாதிக்கூட்டம் ௨௮௨

இதறகுமுனனே நானறிந்தாலும்-உமக்கு
இசைவேனோ நீர்குடிக்க கரணமேபாட்டாலும் ௨௮௩

அதறகென்ன செய்யலா மையா-நாங்க
ளானாலும குறசாதி யென்பதும்பொய்யா ௨௮௪

பண்டாரம் நாமென்று கத்தி-யெந்தன்
பாவனை தீரவந்தோர யதுவென்னபுத்தி ௨௮௫

கொண்டகுலம் பேசுவது பேசசோ-சுவாமி
கொய்ததினை மாவுக்கெனக் கெஞ்சினதும்போச்சோ ௨௮௬

பேருதெரியாமலுரு மாறி-வந்து
சேகுசெய்த மாதாய முமமதமீறி ௨௮௭

பாரமதயானையும்வரா விட்டால்-உமது
பாசாங்குக்குள்ளாக மாட்டேனில்லாட்டால் ௨௮௮

வழகியிர் தாடிகுற வஞ்சி-யென்று
வனவேடனைப்போல்வந்து யென்னையிரெஞ்சி ௨௮௯

அலையாகு தெனவந்து முட்டி நீரும்
காரியங்கொண்டபனை பேசுகிறீர்கெட்டி உகூ௰

வெய்யரான வந்திதின்று தொட்டு நீரும்
வஞ்சகம பேசுகரீ ரிதுவென்னசெட்டு உகூ௧

சலியாமல் நீருருதி சொன்ன-மொழிகள்
தவறுமோ கலிகால மானாலுமென்ன உகூஉ

பொன்னடி துலங்கியவென் மாமி-பெற்ற
புண்ணியனை யனுதினமு மகலாமல்சாமி உகூ௩

யென்னருகி லிருமென்று கேட்டால்-சுவாமி
யெனகுலத்தை நீபழிக்க யுமக்குவிளையாட்டா உகூ௪

வையகத்துக் கேற்காது யென்னை-நீரும்
வஞ்சகம தாயிழந்து பேசுவது நன்னே உகூ௫

தெய்வானையோ சொல்லி விட்டாள் எந்த
சிறுக்கியுமகவள்ளி வுருதுசொல்லி தொட்டாள் உகூ௬

எப்படியோ நானறிய விலலை-யிலாக
மெனக்கும்நீரும்பாகாத விடமொன்று மில்லை உகூ௭

இப்படியு மருந்திட்ட தாரு-உமக்கு
மேலாந்தா சொல்லவந்த மங்கையர்கள்பேரு உகூ௮

வருந்தின் தளித்தவளைச் சொல்லும்-அவளை
மயாபிடித்துக்கொண்டாற்றன் சறுறயிலகேகில்லும் உகூகூ

மருந்திடு மயக்கமில்லா விட்டால்-எனக்கு
பதிலைசொல்ல மாட்டீரோ நானெதுவுங்கேட்டால் ௩௱

முருக்குவளை தாதிகளை வாடி-நம்ம
முத்துலிங்க சுவாமியைக் கூட்டிவாபோடி ௩௱௧

கருதுகருத் திடுபிசகு தோணும்-எந்தன்
கணவனுமை கந்தருக்கு கைபார்க்கவேணும் ௩௱௨

மின்னாரே யென்றிவளுஞ் சொல்ல-பெண்கள்
வேலரிது புதுமையெனக் கேட்டவருமெள்ள ௩௱௩

யென்னடிநீன் யோசனைகள் கொண்டாய்-நானும்
யெவள்வீட்டி லேயிருந் தன்னதைநீகண்டாய் ௩௱௪

என்னுடைய சொல்வருதி மீறி - நீயும்
எதிர்பேச்சு வதினால்யுன்னை மாண்சிறி ௩௱௫

சொன்னவகை யலலாது கண்ணே - சும்மா
தோகையெ நானுமுன்னை பேசுவனோபெண்ணே ௩௱௬

மயங்காதே நீவள்ளி மாதே - உந்தன்
முறைமறிய நானசொன்ன தல்லாதிப்போதே ௩௱௭

ஜெயமாக நான்போயி வருவேன் - வள்ளி
தினமுமுனைப் பிரியாமல் தெரிசனமுந்தருவேன் ௩௱௮

உந்தனைவிட் டகலேனென்று மானே-யென்று
வுபசாரஞ் செய்தவளி ருக்கையின்மேல்தானே ௩௱௯

கந்தனையுங் கோவிலுக்கு தேடி-அங்கே
காணாமல் தெய்வானை யம்மன்மனம்வாடி ௩௱௰

மங்கையர்சு சுந்தரப்பிர காசன்-அந்த
மாணிக்க கெங்கைக்கு போனமுருகேசன் ௩.௧௧

யெங்கேயென வேலவரைத்தேடி-நீங்க
ளிதுநிமிஷம வரவேணு மெனறிடவேயோடி ௩.௧௨

தாதியர்க ளெல்லாருஞ்சென்று-யெங்கள்
சண்முகவே லாயுதனைத் தந்தருளென்று ௩.௧௩

ஆதிசிவமாணிக்க கெங்கை-தீர்த்த
மாடவந்த வேலவரைக் கண்டீர்களோயிங்கே ௩.௧௪

பாதிபிறை சூதலமுகி யாளே-அவள்தன்
பர்த்தாவைக் காணோமென்று தேடுவதினாலே ௩.௧௫

கதித்தபுகழ்கொண்ட முனிவோரே-யெங்கள்
கந்தனையுங்கண்டதுண்டா சொல்லுவீர் நீரே ௩.௧௬

காணிக்கைகொண்டு வந்தோரே-எங்கள்
கட்டழகுதெய்வானை மணவாளனாரே ௩.௧௭

மாணிக்ககெங்கைநீ ராட-யிங்கு
வந்தவரைக் காணீர்களோ யினியெங்கேதேட ௩.௧௮

பாங்கியர்கள் நதியெங்குந் தேட-கோவில்
பணிவிடைக் காராதெரு வீதிவழிநாட ௩.௧௯

ஏங்கியவர்தேடுவது கண்டு-சுவாமி
செங்காணுஞ் சிந்தையி லறந்தன்புகொண்டு ௩.௨௰

வினைவில்மறக் காதெய்வானை-யிந்த
நிமிஷங்கூட்டிவா வென்றேவுஞ்சேனை ௩.௨௧

அனையழைக்க வேணுமென்றுதேடி-வாறார்
ஏந்திழையே நான்போயிவரவும்விடைதாடி ௩.௨௨

தாடியென்றுசொல்லவே திகைத்து-வள்ளி
தையலருஞ் சுவாமிதனைப் பார்த்துமேகைத்து ௩.௨௩

தேடிவந்தபேர்களை நா னடிப்பேன்-அந்த
தெய்வானை வந்தாலு மேசண்டை பிடிப்பேன் ௩.௨௪

என்னுடையகணவனையுந் தேட-அவளுக்
குள்ளவதி காரமின்டை சேழ்க்குதீரோட ௩.௨௫

மன்னவா யிதுவென்ன வென்றே-சொன்ன
வள்ளிதனை யுபசாரஞ் செய்தருகில்நின்றே ௩௨௬
யெனக்குரியமானே நீ கோபம்-இப்போ
யெனபேரில் வைக்காதே வீண்மனஸ்தாபம் ௩௨௭
உனக்கு நான் பிசகுசெய் வேனோ-பெண்ணே
யோசனைகள் செய்யாதே நான்மறப்பேனோ ௩௨௮
போய்வாறேன் வள்ளி தயவாக-யெனக்கு
புகழ்ந்துவிடை தாடிதெய் வானையிட மேக ௩௨௯
வாய்திறந்து சொல்லுமன மகிழ்ந்து-யென்று
வடிவேலர் கேழ்க்கவே வள்ளியு முவந்து ௩௩௰
மறைபுகழு இன்றவடிவேலா-சுவாமி
மனவருத்தமில்லாமல் போய்வாருஞ்சிலா ௩௩௧
இறையவருக் குகந்தமகனாரே-யென்று
யிவள்சொல்லவேலர் வழி கூடிநடந்தாரே ௩௩௨
சித்திர வடிவேலர் நடந்தார் இங்கே
தேடிவந்த தாதியர்கள் கண்டபடி பணிந்தார் ௩௩௩
வெற்றிமயிலோனன்பு கொண்டு-கோயில்
மேவியதெய்வானையையுங் கண்டெதிரேசென்று ௩௩௪
மங்கைமாரே யெனைத்தேடி வானேன்-சம்ம
வள்ளியம்மை தனதுடைய கோவிலுக்குப்போனேன் ௩௨௫
செங்கமல் மாதேயென் கண்ணே-யிப்போ
தேடினது மென்னவகை சொல்லாயோ பெண்ணே ௩௩௬
தெய்வானை யென்றார் துணிந்து-அந்த
தேவிசெவ் வேள்பாத மலரடி பணிந்து ௩௩௭
வைபோக மானவடி வேலை-உடைய
மணவா உமக்குநித மிதுதானோ வேலை ௩௩௮
இளையான்மே லிருக்குதிற பாசஞ்-சுவாமி
யென்பேரிலேனில்லை யுமக்குவிசுவாசம் ௩௩௯
அழையாத விருந்தோ நீர் காணும்-வள்ளி
யவள்மனைக்கி நிதம்வலியம் போகவோவேணும் ௩௪௰
முழுக்கவே யும்மாலேயேச்சே-சாதி
முறைதவறிக் குறவருட சம்மந்த மாச்சே ௩௪௧
இழுக்கான சாதியிலேகி-மாலை
யிட்டாலு மேன்மையது தருவாரோ யோகி ௩௪௨
அடிக்கடிநீ ரவள்மனைக்குப் போனல்-மெத்த
வலக்கணிப்பாகவே சொல்லுவாளானல் ௩௪௩

குடிதனி லுயர்ந்தவரு மில்லை-வள்ளி
 குறவர்குல மானதால் சொன்னேனென்சொல்லை ௩௪௪
நீசனென்று நீரெண்ணுவீரோ-உமக்கு
 நேர்ந்ததுவும் வள்ளியுட மோகமதனிறே ௩௪௫
ஆசையாவ லானந்தமீறி-வள்ளி
 ஆசைகொண்டு பேசுகிறீர் நாணுமக்குப்பாரி ௩௪௬
யாலிசா னெடுத்ததென்ன கோட்டை-புலியில்
 அறியாரோ நீரெனக்கு தேடிவருந்தேட்டை ௩௪௭
தேசியென வன்றுபோ னீர்-வள்ளி
 தேசியவள் தினைமாவை தின்னவேபோனீர் ௩௪௮
திரிபுவனை யருள்பெற்ற பாலா-உமது
 சித்தமது வெப்படியோ கதிரைவடிவேலா ௩௪௯
அரிமருக ரேயென்றுரைக்க-வெங்க
 ளாறுமுகன் சொல்லுவார் தெய்வானைமிக்க ௩௫௰
மானேநான் உன்வருகி பெற்றேன்-பின்பு
 வள்ளிதனை மாலையிட்டு கூட்டிவந்து வைத்தேன் ௩௫௧
தேனேபொன் மேற்பிழைமுக வில்லை-உனக்கு
 தெரியாதோ வீணில் பேசுவதுதொல்லை ௩௫௨
கோவிலுக்கு நீபோடி யென்று-வெங்கள்
 குமரேசன் சிம்மா சனத்திலேயென்று ௩௫௩
சேவலொரு கையினி லிருக்க-வெங்கள்
 சித்திரவடி வேலவரு மேகொலுவிருக்க ௩௫௪
சூடதீவாரா தனைக்கி-வந்து
 சூழ்ந்தார்கள் கோடானு கோடியன்றைக்கி ௩௫௫
அடியவர் பணிந்து துதி பாட-கதிரை
 ஆறுமுகன் பீதினில் கவிமாலைசூட ௩௫௬
சிம்மா தனத்தி லிருக்க-வெங்குஞ்
 ஜெயஜெயென வந்தவர்கள் சூழவேபெருக்க ௩௫௭
அம்மா பரஞ்சோதி பாலன்-நல்ல
 அன்புடன் னருளுவா ராறுமுகவேலன். ௩௫௮
துன்பவினை யணுகாமல் தானே-நீங்கள்
 சுகமாக வாழ்வீரென் றெல்லவர்க்குந்தானே ௨௫௯
தென்கதிரை வேலரருளாக-வந்த
 தேவர்களு மனிதர்களுந் தங்கள்பதிக்கேக ௩௬௰

சித்தர்களும் வந்துநிதம் பணிய-யிந்த
செந்தமிழ் தனக்குதவி செய்சுப்பிரமணிய ௩௬௧

சர்க்கரைக் காரே குறை வில்லை-ஆநந்
சதிர்காம மென்றாலும் வறுமைகளுமில்லை ௩௬௨

தேவர்களு முனிவர்களும் வாழி-யெங்கள்
திருமாலு மயனாலு முமையாளும்வாழி ௩௬௩

நாவலரும் பாவலரும் வாழி-வள்ளி
நாயகன் மேற்கவியி தென்னுளும்வாழி ௩௬௪

புள்ளிமயில் வடிவேலும் வாழி-யிந்தப்
புவியெங்கும் நகரத்தார் புகழ்பெறவேவாழி ௩௬௫

வள்ளிதெய் வானையுடன் மேவி-யோக
வாழ்வுபெறுங் கதிரேச னென்னுளும்வாழி. ௩௬௬

கதிரேசன் ஆனந்தக்களிப்பு

முற்றிற்று.



உ

சிவமயம்

கதிர்காமத் துயேசல்.

சீர்வளருங்கதிரை நாதன்மேல்சிந்துபாட
சித்திவிநாயகனை யெண்ணியே - வாலை
சத்திசிவனைத்துதி பண்ணியே க

சத்திசிவனருளும் வெற்றிவேலவர்மலர்த்
தாளிணை தன்னைமறவேனே - கந்த
வேளெனுமெங்கள்முருகோனே உ

கோனெனுமிந்திரனுந் தேவருந்துதிசெய்யுங்
கும்பன் குருவைப்பணிந்தேற்ற - வெகு
யின்பமுடனேகதை வாழ்த்த ங

யின்பமுடனேவரு மன்புள்ளதோழியரே
யெங்கள்குலதேவனருள் சேரும் - இந்த
தென்கதிர்காமமதைப் பாரும் ச

தென்கதிர்காமமென்றால் யெங்கும்பிரகாசமாக
சேவற்க்கொடிதுலங்குதோதையா - இந்த
மாவளமாநகரில்த் தானையா ரு

மரவைமானமிந்த மாநகர்தனில்வள்ளி
மங்கைக்கிசைந்தமுருகோன் பெண்ணே - வேல
ரிங்கேயிருக்கிறார் தான் கண்ணே ௬

இங்கேயிருக்கிறவர் செங்கைவேலவ ரென்றால்
யிந்நமதசரிமேல்ப் பாரையா - மேனி
யந்தரபவனிவாற தாரையா ௭

அந்தரப்பவனிவரும் கந்தன் பன்னிருகையன்
ஆனைமேலேறிவரு வோரடி - தேவர்
சேனைசேனாதிபதி தானடி ௮

சேனாதிபதியிவ ரானைமேலேறிக்கொண்டு
தெருவில்பவனிவரும் வேலனை - வெகு
அருமையாயீன்றவளார் வேலனை ௯

அருமையாயீன்றவளுந் திருமாலுடன்பிறந்த
ஆத்தாளெங்கள்பர மேஸ்வரி - கைலை
காத்தாளேமங்கைமங்க ளேஸ்வரி ௰

காத்தாளேசெங்கைவேல னாத்தாளிவளென்றீரே
கயிலாசநாதர்க்கிவ ளாரு - யெனக்
கோயிலாகசொல்லுமறுசிறு ௧௧

ஒயிலாசயீஸ்பரியுங் கயிலாசநாதருக்கு
உத்தமிசொந்தமனையாளடி - வாலை
சத்திசிவனென்பார்கள் கேளடி ௧௨

சத்திசிவனையவர் பெற்றிடும்ரதிமதன்
தான்வந்தெதிர்த்ததென்ன சீரையா - சிவன்
ஏனவர்தன்னையெரித் தாரையா ௧௩

ஏனெரித்தாரென்றாயே மானேயுடையவர்மேல்
யேதுக்குப்பாணமதனே னெய்தான் - சிவன்
வாதுக்கனலாகவேதான் செய்தான் ௧௪

வாதுக்கெதிர்த்துவந்த போதுவிசயன்வில்லை
வாங்கிசிவனையடிக்கே னவதான் - சிவன்
தாங்கியருளவர்க்குயேன் செய்தான் ௧௫

தாங்கினதுதவத்தா லோங்கியபார்த்தனனுந்
தானேபொறுத்தாருன் சிந்தையார் - இந்த
ஆனைமேல்வாறகந்தன் தங்கையார் ௧௬

ஆனைமுகமும்பெரும் பானைவயிறிலங்க
அந்தாயிருக்கிறாரே பாரையா - ஒரு
தந்தமிலங்கியவ ராரையா ௧௭

தந்தமதாதுலங்க சவந்தாரமிலங்க
தனியேயிருக்கிறவர் தானபெண்ணே - வள்ளிக்
கினியகுமாரனதமை போனகண்ணே ௧௮

இனியகுமாரனையும் கனிவாய்வளர்த்தெடுத்த
யீசனுக்குயிந்தப்பிள்ளை யேன்று - தந்தி
வேஷமெடுக்கவிதி கானே ௧௯

வேஷமெடுத்துகண் டேசியவள்ளியஞ்சி
வேலெனுங்கந்தனைக்கொண் டாடினால் ஒரு
தாழ்வன்றிமாலையிடக் கூடினாள் ௨௦

தாழ்வன்றியேபுவியில் வாழ்வுமிருக்ககந்தன்
சங்கையிலலாமல்கெஞ்சினீரே - குற
மங்கையைக்கூட்டிக் கொஞ்சினீரே ௨௧

பங்கைகுறவருட தங்கைபல்லடிபெண்ணே
வந்தபகவன்முனி வேண்டி - ஆதி
சொந்தமாய்ப்பெற்ற வள்ளிதாண்டி ௨௨

சொந்தமாய்வேலனுக்கு யிந்தவள்ளிக்குமுன்னே
சூட்டவில்லையோமணமாலை - திருப்
பூட்டவில்லையோபுவி மேலே ௨௩

பூட்டவேதெய்வானையைக் கேட்டுமுன்னாளையிலே
பூமனுநசெய்தாடிவேலன் - ஆழி
வாமணன்தங்கையருள் பாலன் ௨௪

வாமணனுமஞ்செய்து நேமமாயமாலையிட்டு
வந்தவர்வட்டக்குடைமின்ன - யிந்த
தந்திமேலேறிவாறதென்ன ௨௫

தந்தியிலேறிவார இந்தத்திருவிழாவின்
சங்கையதுகாணடி கண்மணே - சுவாமிக்
கிங்கேவளமையிது பெண்ணே ௨௬

இங்கேவளமையென்று லெங்கும்பகலைப்போலே
யிருபுறமுஞ்சனங்க ளோகநியே - கொண்டு
வருகிறதீபமென்ன காந்தியே ௨௭

காந்தியுடனேகையி லேந்திக்கொண்டாடிச்சிலர்
கர்ப்பூரதீபமதைத் தாண்டி - வாறார்
சுப்பிரமணியனுக்கே தாண்டி ௨௮

தாண்டியுபசரித்து வேண்டியவாமஞ்செய்ய
சத்திரங்கட்டிவைத்த தாரையா - வேலை
சித்திரமான திதைப் பாரையா ௨௯

சித்திரமானவன்ன சத்திரங்கட்டிவைத்தோர்
செந்தமிழ்சேர்நகரத்தாரடி - வைத்த
நந்தவனந்தனைச்சுற்றிப் பாரடி ௩௰

நந்தவனமும்வைத்து சொந்தமடங்கட்டிய
நகரத்தாரெனுலவாரு - அவர்
புகழ்பெற்றிருப்பதெந்த ஊரு ௩௧

ஊரெனும்பாண்டிதேசத் தாரெனும்போபுகழ்ந்து
ஓங்கியதொண்ணூற்றாறாரடி - வெகு
பாங்குள்ளநாட்டுக்கோட்டையாரடி ௩௨

நாட்டுக்கோட்டையாரென்றால் வாட்டமில்லாதலங்கை
நாட்டுக்குவந்தவகை யேதையா - புகழ்
நீட்டும்நகரத்தார்கள் தானையா ௩௩

தானையாவென்றுசொன்ன மானேகொழும்பினிலே
சந்தோஷமாகவேயவர் பாரமுஞ் - செய்ய
வந்தவர்களிவரென் னேரமும் ௩௪

என்னேரமுங்கொழும்பில் சொர்ன்னயாபாரஞ்செய்தால்
யிந்தக்கதிர்காமத்தை நாடியே - யிவர்
வந்ததெனனபுகழ்கள் பாடியே ௩௫

பாடியேவேலெடுத்து ஆடிக்கொண்டாடி மதப்
பௌரணைக்கேவரு வாரடி - யிங்கே
வருஷங்கள்தோறுமவெகு சீரடி ௩௬

வருஷங்கள்தோறுமிங்கே வருவாராகிலுஞ்சொந்த
மானகர்க்கேகிலைப்போதுகாண் - யிங்கே
தான்வேலெடுத்துவாரதாருகாண் ௩௭

ஆருகாணென்றும்புக ழேரும்புதுக்கணக்குக்
காகவந்தநகரத் தார்கள் - வெகு
சேகரமாகவரு வார்கள் ௩௮

சேகரமானகன யோகரெனுமிவர்கள்
செல்வமிருந்தவரோ தோணும் - நல்ல
கல்விமிருந்தவரோ சாணும் ௩௯

கல்வித்திறமை யுண்டு செல்வமகிமையுண்டு
கந்தனருளைப்பெற்ற பேருக்கே - வெகு
சிந்தையாய்நாட்டுக்கோட்டை யாருக்கே ௪௰

நாட்டுக்கோட்டையாருக்கு நீட்டும்புகழ்படைத்த
நகரத்தாரென்றிவரைத தானையா - யெங்கும்
நல்லபேர்களும்சொல்ல தேதையா ௪௧

சகலபாபாரதர்மஞ் சகலதிருப்பணியும்
தவறுமல்ச்செய்துவந்த தோதினால் - புவியி
லிவகோநகரத்தாரென் றேறினார் ௪௨

இவர்களைப்போலனேகர் யெவளவோதர்மஞ்செய்தார்
யேனையோகாணுமிந்த நாளில்லை - அப்போ
தானவர்க்கந்தபே ரேணில்லை ௪௩

போர்புகழ்சரிதைகிரிகை நேருங்குகனருளும்
பெற்றதினால்நகரத்தாரே - யென்று
யெத்தலத்திலுமுரைத் தாரே ௪௪

எத்தலத்திலும்புகழ் பெற்றமதுரைச்சொக்கர்
யிருக்குங்கோயிலையெல்லாந் தானையா - பொன்னால
சிறக்கவலங்கரித்த தாரையா ௪௫

ஆறென்றுய்பெண்ணேயெங்கும் பேறுணதென்மதுரை
ஆலயத்தைப்புதிப்பித்த தாரடி - வடி
வேலனருள்நகரத் தாரடி ௪௬

வேலனைப்பெற்றசத்தி வாலைசிவகாமித்தாய்
மேவுஞ்சிதம்பர நடேசனார் - சபை
யாவும்புதிப்பிக்கிற தாரையா ௪௭

புதிப்பிக்கவேணுமென்று மதிப்பித்துகந்துசெய்தா
குவியில்புகழ்நகரத் தாரடி - முகில்கள்
குவ்யும்தண்மைபோல்கொடை யாரடி ௪௮

கொடையார்கள்தர்மம்செய்ய சடையாரோவாணிபத்தில்
கூடும்முயர்ச்சியுள்ள வாழ்வுளோர் - புகழ்
நாடுமவேதாகமத்தின் கேள்வியோர் ௪௯

நாடுமயோத்திகாசி ராமேஸ்வரம்வரைக்கும்
நகரத்தார்தர்மமில்லை காட்டினார் - நித்தியம்
சுபஜெயமங்களத்தைச் சூட்டினார் ௫௰

சூட்டியவர்க்கருளைத் தீட்டியவேலவர்மேல்ச்
சொன்னகவியெங்குமப்பிரகாசம் - ஓகோ
மன்னவருமக்கெந்த தேசம் ௫௧

தேசமென்பதுராமன் சேதுபந்தனஞ்செய்த
சிமான்திருப்புல்லாணி தானடி - தங்கம்
ராமசாமியென்பது நானடி ௫௨

நானடிக்கடிகந்த நாதன் தனைப்பணிய
நல்லதினைக்கனைப்ப காணுமே - அதைச்
சொல்லநாமிங்கேவர வேணும் ௫௩

சொல்லக்கேள்சுக்கிரவாரம் சோமவாரங்கள்மாதம்
தோதானகார்த்திகைக்கித் தானடி - வந்தால்
பாதகங்கள்கொன்று போமடி ௫௪

பாதகந்தன்னைப் பரிகாசமேசெய்யுங்கந்தன்
பாதந்தனைப்பணிய வேணும் - நாங்கள்
காதல்கொண்டேவருவோம் காணும் ௫௫

காணுந்தலமிருந்து கதிரைப்பதியுகந்த
கந்தன்செந்தூரில்வளர் யோகண்டி - நல்ல
தொந்தமிட்டாமயில் வாகண்டி ௫௬

வாகன்செந்தூரனென்றால் வையாபுரிபழனி
மாமலைமேலிருப்ப தாரு - நல்ல
சாமிமலைக்குகந்த தாரு ௫௭

சாமிமலைமுதலாய் பூமிதனிலுமுள்ள
தலங்களெல்லாமிவர் தாண்டி - மேவி
விளங்குங்கதிரைப்பதி யாண்டி ௫௮

ஆண்டிக்கிவ்வுலகமெல்லாம் வேண்டியபதியென்றால்
அத்தலங்களிலெது காணும் - இவர்
சித்தம்வைத்திருப்பதெங் கோனும் ௫௯

சித்தம்வைத்திருப்பது முத்தரெனுமடியார்
சிந்தையைவிட்டகல மாட்டார் - மாயன்
செந்திருவாழ்கதிரை நாட்டார் ௬௰

நாட்டாரடியவர்மேல் நாட்டமாயிருந்திட்டால்
நாட்டுப்பதிகளில்ச் செல்லாரோ - நாமும்
கேட்டவரங்கள்தரு வாரோ ௬௧

கேட்டவரந்தருவார் நாட்டுப்பதியில்செல்வார்
கேசவன்தன்மருகனார்க்கே-யெண்ணி
வாசமாய்நம்பிடக் கீதார்க்கே ௬௨

வாசமுடனேகதி ரேசனைத்தொழுதிட
வாருமையாபுகழ லாலி - யினி
கூறும்ஜெயமங்கள வாழி ௬௩

வாழிகதிரேசனும் வாழிவள்ளிதெய்வானை
வாழியடியவர்கள வாழி - யெங்கள்
மேழிக்கொடிக்குலமும் வாழி ௬௪

கதிர்காமத்து ஏசல்

முற்றிற்று.

உ

சிவமயம்.

கதிர்காமக்கும்மி.

—(-)—

சீர்வளரும்பெற்ற குயில்கூவும்நல்ல
தென்கதிர்காம மதில்மேவும்
ஆறுமுகன்கதி ரேசனுமேயெங்கள்
அண்டர்கொண்டாடிய வாசனுமே. க

மங்களஞ்சேரும் கும்மிப்பாடவந்து
மாணிக்கப்பிள்ளையார் காப்பாட
சிங்கத்திலேறிய பூரணியேயெந்தன்
செந்தமிழ்க்கேயருள் நாரணியே. உ

சுந்தரநீரணி ஆறுமுகன் மீதில்
சொல்லுந்தமிழுக்கு நாலுமுகனை
சிந்தைக்கிசைந்தவளை வாழ்த்திக்கவி
செப்பும்புலவர் களைப்போற்றி. ந

சந்தோஷமாய்க்கும்மிப் பாட்டுரைக்கக்கந்தன்
தையல்தெய்வானையு மேசிறக்க
வந்துதவிசெய்ய வேணுமம்மாநானும்
வாழ்த்துங்கவிமாலை பூணுமம்மா. ச

கந்தன்கதிர்காம வேலனைபுவி
கார்க்குமறைமுத லோலனை
யெந்தனுக்கேயனு கூலனைதொழு
தேத்திப்பணியவும் சீலனே. ரு

மங்கையரெல்லோரும் வாருங்கடியிந்த
மாணிக்கசெங்கைநீ ராடுங்கடி
சிங்காரமாய்ப்பணி பூட்டிக்கொண்டுமுசம்
சிறந்தகுங்குமம் தீட்டுங்கடி. சா

கந்தனுக்கேமலர் மாலைகட்டிநல்ல
கோலவர்ணப்பட்டுச் சேலைகட்டி
சேர்ந்திணையாகவே பாடுங்கடிகந்தன்
சேவடிபோற்றிக்கொண்டாடுங்கடி. எ

ஐயமில்லாமலே நாடிவந்தயிந்த
ஆறுமுகன்பதி தேடிவந்த
செய்யிழைமார்களே வாருங்கடிகவிச்
சிற்சபைசொல்லுறேன் கேளுங்கடி. அ

ஓதியசெந்தமிழ்ப் பாடவேயிந்த
ஊர்வளஞ்சொல்லிக்கொண்டாடவே
யேதுபிழைகளிருந்தாலும்சுவாமி
ஏழைக்கிரங்கி யெனையாளும். ௯

ஆறுமுகனென்று பேருடையானெனை
யாளுங்கதிர்காமத் தூருடையான்
சீருடையான்வடி வேலுடையான்வெகு
சித்தர்கள்போற்றிய காலுடையான். ௰

சத்திக்குகந்த மகன்தானேயிவர்
தந்தையுமுக்கண் சிவன்தானே
யெத்திசையும்புகழ் மால்முருகன்றன்னை
யேத்திக்கொண்டாடலாம் வாருங்கடி. ௰௧

வாசம்புகழ்கதிர் காமத்திலேமழை
மாரிபெய்யவுஞ்சந் தோஷத்திலே
ஆசைமிகுந்துழ வேத்தினர்செந்நெல்
அள்ளியவலெங்கும் தூத்தினர். ௰௨

செந்நெல்களெல்லாம் விளைந்திருக்குமெங்கும்
சிங்களநாடு மகிழ்ந்திருக்கும்
கன்னல்தழைத்தெங்கும் முத்தீனும்பூங்
காவுகளெல்லாம் வளர்ந்தோணும். ௰௩

மாவுங்கொய்யாவு மடர்ந்திருக்கும்புன்னை
பரம்பிலாவுந் தொடர்ந்திருக்கும்
கூவுங்குயில்மயில் கூட்டமும்வெகு
குஞ்சரங்களெங்கும் நாட்டமும். ௰௪

கானகத்தில்மயில் ரொம்பவடிபுலி
கரடிமான்மரைக் குட்பலடி
வானரங்கள்விளை யாடுவதுமெங்கும்
வண்டுகள்கீதங்கள் பாடுவதும். ௰௫

மாணிக்ககெங்கையா றோடுவதும்நிதம்
மாதவர்வந்துநீ ராடுவதும்
காணிக்கைகொண்டு வருவாரேகதிர்
காமத்தைநோக்கி வெகுபேரே. ௰௬

வீதியலங்கார மெத்தவ யிதில்
மேவுஞ்சனங்களும் சுத்தமடி
சோதிமயமான கோபுரமுங்கோவில்
சூழ்ந்ததிருமதில் தாவரமும். ௧௭

குமரன்கோவி லிலங்குதுபாரிதில்
கொட்டியமேள முழங்குதுபார்
அமரர்கூடிய கூடமும்வள்ளி
யம்மைதெய்வானைக்கி மாடமும். ௧௮

என்னசொல்வேன்கதிர் காமத்தின்கோவி
லிலங்கியவலங் காரத்தை
சன்னிதிகாவலும் சிங்களவர்கோவில்
ஸ்தானிகராவதும் சிங்களவர். ௧௯

நன்னகரெங்கினும் சிங்களவர்கோவில்
நாட்டியக்காரரும் சிங்களவர்
மன்னனரசுக் குருத்தவர்கள்விட்ட
மாணியங்கள்ரொம்பப் பெற்றவர்கள். ௨௰

புத்துமதத்தி லுகந்தவர்கள்கந்தன்
பூசையில்நித்த மிருந்தவர்கள்
நித்தமும்சிங்களர் கூடுவதுமிவர்
நேர்ந்துபணிந்துகொண்டாடுவதும். ௨௧

தெய்வானைக்கேத்த மலர்கள்கொய்வார்
தேசசன்னியாசிகள் பூசைசெய்வார்
வைபோகமிப்படி யுள்ளதடிஸ்தல
மகிமையைச்சொல்ல நல்லதடி. ௨௨

யெண்டிசைதோறும் புகழ்வாசன்கொழும்
யெங்கும்சிறந்த கதிரேசன்
கண்டியில்மேவிய தீரனடிகந்தன்
காலாயுதக்கொடி வீரனடி ௨௩

செங்கைவேல்வில்லையும் பெற்றவண்டி அந்த
தென்னிலங்காபுரி மெய்த்தவண்டி
சிங்காரமாகிய வேலனடி அவர்
சிறப்பைநானசொல்லக் கேளுங்கடி. ௨௪

சிறப்பைச்சொன்னவ ரேகனும்அந்த
தென்னிலங்கை யென்பதுதானும்

யிருப்பதெந்தவிடங்காணும் அதற்
கெப்படிப்போனால் நடந்தேறணும். ௨௫

தண்டிகொழும்பு மிருப்பதெங்கே யிந்த
கார்க்கடல்மத்தியில் தீவுமிங்கே
உண்டானகாரணந் தானுமையா அந்த
உண்மையைச்சொல்லவும் வேணுமையா. ௨௬

சொல்லுகிறேன்கேளடி மின்னாளதேவர்
சொன்னசபதத்தால் முன்னாலே
வெல்லவேமாருகம் விசையிலே தள்ள
மேருமுடியிந்தத் திசையிலே. ௨௭

வந்துவிழுந்த யிடமாச்சுயிந்த
வாரிக்குமேலே திடலாச்சு
உற்திக்கமலத் துதித்தவருங்கண்டு
உள்ளத்திலெண்ணி மதித்தவரும். ௨௮

ஏழுசற்றுக்கோட்டையாக்கியே யிதற்
கிலங்கையென்னும் பேர்தாக்கியே
ஆளுமென்றுமன நற்பாலேசொல்லி
ஆண்டகுபோனாக் கிப்பாலே. ௨௯

ராணுவத்தோடே செயம்பூண்டான்மன்னன்
ராவணன்தென்னிலங்கை யாண்டான்
போனதிரையதா யுகத்திலேவந்த
பொற்கொடிசீதையை வனத்திலே. ௩௰

கண்டுசிறையெடுத் தேடிவந்தான்ராமன்
கவிப்படையுடன் தேடிவந்தான்
நின்றுகடலைக்கண் டேதிகைத்தான் அந்த
நேரம்வருணனையு மழைத்தான். ௩௧

சீதையினாலே மனமுகந்துராமன்
தெர்ப்பசயன மதிலிருந்து
ஆதிசேதுவெனப் பேர்பொருந்திக்கன்னி
யாகுமரியெல்லை கண்டாறி. ௩௨

பரப்பிலேபைக்கு யோசனையாய்கவிப்
படைமலைகொண்டடைத்திணையாய்
உத்துயோசனை நூறுமட்டும் அணை
உண்டுபண்ணிலங்கைக் கோட்டைமட்டும். ௩௩

நடந்துலங்கையைக் கண்டபின்புராமன்
ராவணனைக்கொன்று சென்றபின்பு
அடர்ந்தராட்சதக் குடிபழியதிரு
வணைசிகரனும் தான்மறைய. ௩௪

பின்னாலிலங்கையைச் சிறுக்கித்தவப்
பெருமையால் கொஞ்சப பேருக்கி
அன்னாளவிபீஷண னாண்டுவிட்டார்பின்பு
அண்டருலகத்தைச் சார்ந்துவிட்டார். ௩௫

நாட்டமுள்ளகயல்க் கண்ணாளிலங்கை
நகரம்நாள்சென்று பின்னாலே
கோட்டையழிந்து கடலாச்சுஇது
கொஞ்சமாய்த்தீவிங்கே யுண்டாச்சு. ௩௬

அப்பாலித்தீவு சீரில்லாமல்யிதில்
ஆளவொருவரு மில்லாமல்
ஒப்பாதகாடு மலைபாச்சிபெரி
யோர்களுலாவு மிடமாச்சு. ௩௭

நயமிருந்த பெருங்காடுவெகு
நாளாயிருந்ததின் பிற்பாடு
யியக்கரென்றொரு ராட்சதனும்யிதில்
யிருந்தரசிட்டான் யேக்சவனும். ௩௮

நத்தியேநாகர் சிலர்காலைம்மேல்
நாட்டையுமாண்டுவருங்காலம்
புத்தரும்வநதிதில் நாடினார்சிலர்
புத்தர்மதத்தைக் கொண்டாடினார். ௩௯

திசைபுகழ்வங்க தேசாதிராசன்
சிங்கவாகுபெத்த ஞாயாதி
விசயராசனும் வந்தாண்டிபூமி
விஸ்தாரங்கண்டு மகிழ்ந்தாண்டி. ௪௰

தலைமன்னாரென்று பேட்டைக்கட்டிராசன்
தம்பன்னாரென்றும்கோட்டைகட்டி
சில்லவிமையைக் கொண்டாடக்கண்டு
தென்னவியக்கர் மகள்கூட. ௪௧

செப்பமுடனிந்த யாளவந்தான்வங்க
தேசத்ததிபன மகனிவன்தான்

அப்பாலித்திவுக் கரசாடிவந்து
ஆண்டவர்கள் வெகுபேர்களடி. ௪௨

வங்காளர்சிங்களர் வெள்ளாளர்யிந்து
மதசமையத்து வல்லாளர்
யிங்கேவந்துகுடி யேறினார்யிதர்க்
கிசைந்தாசரு மீறினார். ௪௩

சிங்களப்பாஷையு மேலாச்சுயிதில்
சிவசமயமு மூண்டாச்சு
மங்கையரேசில ராசாக்கள்புத்து
மதசமயத்தை மேலாக்க. ௪௪

பாண்டிசோழதேசத் தீரர்களும்வந்து
பட்டமாண்ட முடிவீரர்களும்
வேண்டியகோட்டைகள் கட்டிக்கொண்டார்மாதம்
வேறுசெய்யசண்டை யிட்டுக்கொண்டார். ௪௫

பாவையேயெங்கும் நகராச்சுநல்ல
பாருலகத்திலே பேருச்சு
மேவும்சிவஸ்தல மெத்தவுண்டியர்த
விஸ்தாரஞ்சொல்லவு முத்தியுண்டு. ௪௬

உன்னிதமானமலையுமுண்டு யிதி
லோங்கும்சிவனடி பாதமுண்டு
முன்னீஸ்புரம்வெகு முக்கியமாம் அதில்
மூலகணேசன் சிலாக்கியமாம். ௪௭

கேட்டவர்க்கே யனுகூலமாம்திருக்
கேஸ்புரமென்றொரு தானமாம்
நாட்டமுள்ளநகு லேஸ்புரமாம்சிவ
நாதனுகந்தகோணேஸ்புரமாம். ௪௮

தண்டேஸ்புரம்வெகு தகுதியாம்ஐயன்
சர்த்தாக்கோவிலொரு பகுதியாம்
எண்டிசைமொய்த்த குமரபுரம்புக
ழிலங்கும்சந்திர சேகரபுரம். ௪௯

கண்டலர்மொய்த்த மாவிட்டபுரம்ராச
சர்த்தறல்செய்த தனேசபுரம்
தொண்டர்துதிக்கும் தலங்களிதாய்யின்னம்
தோணுதிருப்ப தனேகமதாம். ௫௰

ராமேஸ்புரமிதைச் சேர்ந்ததடி முன்னே
ராமனுதனுலமைந்ததடி
பூமிக்குகந்தான மன்னர்மெத்தபட்டம்
பூண்டரசிட்ட நகரமெத்த. ௫௧

கண்டியென்றும்கோட்டைக் காடிதென்றுநல்ல
கழனிநீர்கொழும் பூரிதென்றும்
அண்டியவூரெல்லாம் கட்டடமாம்கோட்டை
அனுராசபுரபட்டணமாம். ௫௨

முத்துச்சலாவத் துறையுமுண்டுகடல்
முழுகிச்சங்கு குளிப்பதுண்டு
ரெத்தினபுரியென்று ஊருமுண்டுஅதில்
ரெத்தினமணிகள் விளைவதுண்டு. ௫௩

பன்னகாமமதும் பறைகாடாய்பாழ்ப்
பாணப்பகுதி வெகுநாடாம்
இன்னமிருக்கு தனேகமெல்லையிப்ப
யெனக்குச்சொல்லச் சமையமில்லை. ௫௪

கண்டவிடமெல்லா மூராச்சுகோவில்
கட்டியகட்டடம் பேராச்சு
இண்டுமுண்டாப்பளி கொண்டார்கள்நல்ல
சிங்களரோடர சாண்டார்கள். ௫௫

கண்டியையாண்டிடும் வீரனுங்கன்யிதில்
கட்சிவிக்ரம ராஜசிங்கன்
தண்டிகையேறிய சூரர்களும்யிவன்
தலைமுறைவரை ராஜர்களும். ௫௬

தொண்ணூத்தாறுமுடி மன்னரடி அதைச்
சொல்லுஞ்சரித்திர மின்னமடி
விண்ணவர்மெய்த்திடு மானகரில்யிதில்
மேவியரசிட்ட பேரவரில். ௫௭

கண்டியரசனும் பின்னாலே அவன்
கட்டடம்காணலாம் கண்ணாலே
வண்டனையாய்க்காரனடி அவன்
வம்மீஷம்நாய்க்க ராஜனடி. ௫௮

அதற்குமுந்திய ராஜர்தொடுக்கட்டி
ஆண்டவிடமெல்லாம் சீருகெட்டு

மதிப்பதாக்கிடந் தோணுமலைக்காடு
    மண்டியிருப்பதும் தானுமே. ௫௯

இங்கிர்தன்விரத்தில் சூரசிங்கன்யிந்த
    இலங்கைநாடெல்லாம் ராஜசிங்கன்
சங்கையுடனர சாளையிலேசீமை
    தன்னிலிருந்தந்த வேளையிலே. ௬௰

சிங்காரக்கப்பலில் பறங்கியேயிந்த
    தீவுக்குள்ளேவந்து யிறங்கியே
தங்கச்சிகரம் தனைவகுத்துப்புத்தர்
    தாவுங்கழனித் திசையடுத்து. ௬௧

கோட்டையுங்கட்டிக் கொடிபூட்டியதைக்
    கொழும்பனென்றுசொல்லி பேர்நாட்டி
வேட்டெழுப்பிக்காலிக் கோட்டைகட்டிநல்ல
    விஸ்தாரமாத்திர பேட்டைகட்டி. ௬௨

தொட்டதிருக்கோண மாமலையும்அந்த
    துறைமுகங்களை யாண்டதையும்
ஒட்டாமல்த்தள்ளி விரைவாகிவந்து
    உலர்ந்தாக்காற ருசாராக. ௬௩

ஆண்டுசிலகாலம் விட்டார்கள்பின்பு
    ஆங்கிலேயவர்வந்து தொட்டார்கள்
வேண்டியதர்மம் நிலைநிறுத்தயிந்த
    மேதினியையெல்லாம் சீர்த்திருத்த. ௬௪

கும்பமுனியார்வந்து ஓட்டிக்கொண்டார்யிந்த
    கொழும்புகோட்டையைக் கட்டிக்கொண்டார்
வம்பானகாட்டையும் வெற்றியுற்றார்கோடு
    வங்காளக்கச்சேரி கட்டலுற்றார். ௬௫

கண்டியரசனைக் கெடுத்திட்டார்பெருங்
    கள்ளர்களைச் சுட்டு யருத்திட்டார்
வண்டிக்கிறோட்டுக ளுண்டுபண்ணியிதில்
    மாகாணங்களாய்த் துண்டுபண்ணி. ௬௬

துறைமுகங்களை நோக்கிகாப்பித்
    தோட்டங்களையெல்லாம் சீராக்கி
நிறையயிந்தியாச் சனங்களும்நேகு
    நிறைந்ததீர்வைப் பணங்களும். ௬௭

மின்னல்வேகங்கொண்ட தந்திவைத்தார்பேசி
விளம்பும்ஆபீசை முந்திவைத்தார்
என்னசொல்லுவேனடி மின்னரசேயிந்த
இங்கிலீஷ்காரர் தன்னரசை. ௬௯

பூட்டிறயிலேயும் நடத்தினர்யெங்கும்
புகைவிளக்கையும் பொருத்தினர்
தாஷ்டிகமான கடலைக்கிழூட
தடுத்தணைகட்டி யேசெருக்கி. ௬௯

தண்டவாளச்சூட்சம்வைத்தாரே மலைத்
தண்ணீரைவாவென் றழைத்தாரே
மண்டலத்தில்புகழ் பெற்றதடிகப்பல்
வாறதனேகமாய் நித்தமடி. ௭௰

தண்டமிழ்சேர்புவி பெத்தவளாம்யிந்தியா
சக்கரவர்த்திப்பட்டம் பெற்றவளாம்
லண்டனாசாட்சியைச் செலுத்தும்மகா
ராணிகட்டளைப் படிநடத்தும். ௭௧

இங்கிலீஷ்காரரா லேயெல்லோநம்ம
இந்தியாவும்லெங்கைத் தீவுமல்லோ
கங்கையும்சிங்காரமுண்டாச்சு வெகு
தாழ்விலலாவாழ்வுக ளுண்டாச்சு. ௭௨

பூமியில்கள்ளர் பயம்போச்சுவெகு
புத்தியும்வித்தையு மேலாச்சு
சாமிகதிரேசன் தன்னருளால் ஒரு
தாழ்வென் றுமில்லையே தோழிப்பெண்ணே. ௭௩

தாழ்வில்லாத்தண்மை யுடன்வாழும்கவி
சாற்றியமன்னவ ரேகேளும்
ஆளுங்கதிரேச னித்தலத்தில்வந்த
ஆரம்பத்தின்கதை சொல்லுமையா. ௭௪

ஆரம்பமென்ன புராணத்திலேகதை
அறிந்தமட்டுமின் னேரத்திலே
கூறவுங்சேளுங்கோ பெண்ணுரேவர்ன்ன
கோலவிழிக்கயல்க் கண்ணுரே. ௭௫

அண்டமெல்லாமொரு தகத்திலேகட்டி
ஆண்டகிரேயதா யுகத்திலே

கொண்டரசாட்சியைச் செலுத்தியேதேவர்
கோனைவெருட்டியே கொளுத்தியே. ௭௬

பாரவினையாளுக் கொஞ்சாதவெகு
படைப்பெருக்கத்துக் கஞ்சாத,
வீரப்பிரதாப மிகப்பூண்டமன்னன்
வீரமயேந்திர புரமாண்ட. ௭௭

வாசமுள்ளசூர னாளையிலே அவன்
வந்துபோர்செய்திடும் வேளையிலே
பாசறைவிடு மிதில்தாண்டிகந்தன்
படைப்பெருக்க மிதில்த்தாண்டி. ௭௮

குன்றெனும்சூரைத் தூக்கினார்தேவர்
கோனுக்காசை யுண்டாக்கினார்
அன்றுமுதல்கந்தன் வாசமடியிதில்
அண்டர்களும் விசுவாசமடி. ௭௯

காமன்மைத்துனனைத் தொண்டுபண்ணிகதிர்
காமமென்றேபேரை யுண்டுபண்ணி,
மாமுனிவோர்கள் கொண்டாடிவந்தம்ம
வள்ளிமணாள னிவன்தாண்டி. ௮0

மன்னவரேகவி சொன்னவரேயிங்கே
வாருமையாசொல்லக் கேளுமையா
மின்னியவேலவ ரைவாழ்த்தமுறை
விளங்கச்சொல்லும் பணிந்தேற்ற. ௮௧

விளங்கும்தீப தெரிசனமும்தவில்
மேளம்தவண்டை முரசினமும்
முளங்கும்சன்னதி முன்பாகச்சென்று
மூலஸ்தானத்தைப் பாருங்கடி. ௮௨

மூலஸ்தானம் தெரியாமேசபை
முன்ஸ்தலமண்டபம் தோணுமே
சீலமிருகந்தன் சன்னதியிலிட்ட
திரைமறைப்பிங்கே யேதுக்கையா. ௮௩

திரைமறைப்பு வளமையடிகந்தன்
சேவடிகாண்ப தருமையடி.
முறைதெரியாத மானிடர்க்குக்கந்தன்
முன்பணிவாசலுர் தோணுது. ௮௪

முன்மணிவாசல் கடக்கணுமேசுவாமி
மூலஸ்தான மடுக்கணுமே
நன்மையுகந்த கதிரேசன்தனை
நானறியவகை சொல்லுமையா. ௮௫

நானுமறிந்தது மில்லையடிசொன்னா
நம்புவையோவெந்தன் சொல்லையடி
தேனருந்தவழி தோணுட்டல்கந்தன்
சேருவைகாண முடியாது. ௮௬

சேருவைகாண முடியாவிட்டாலிந்தச்
சிங்களவரெனும் ஸ்தானிகர்கள்
ஆறுமுகவ னறியாமல்நிதம்
ஆருக்கலங்காரம் செய்வார்கள். ௮௭

ஆருக்கென்றால்வர்ணப்பேழையொன் றதற்க்
கன்புற்றலங்காரம் செய்துகொண்டு
பாரியகேடக மீதேற்றிவீதி
பவனிவாரது முண்டேமடி. ௮௮

பவனிவந்திடும் பேழையதுவென்ன
பாவினையாகவே சமைந்தது
அவனியெல்லாம் புகழ்ந்தேற்றபேழைக்
கருள்நிறைந்தது மெவ்விதங்காண். ௮௯

அருள்நிறைந்து சமைந்தவித்தைவெகு
அந்தரங்கமிந்தப் பெட்டகத்தை
குறிவறிந்து துலக்காட்டால்கண்டு
கொள்ளமுடியாது வள்ளலையே. ௯௰

வள்ளலுகந்திடும் கோவிலுக்குமுழு
வச்சிரத்தட்டோடு போடாமல்
வெள்ளியமாமணி மேடையெல்லாம்செய்து
செப்போடிட்டது மேதுக்கையா. ௯௧

செப்போடல்லவே தோழியரேயிது
சிவந்தபத்தரை மாத்தாகும்
ஒப்பாதபுவி மானிடர்க்கிது
செப்போடாகவே தோணுமடி. ௯௨

செப்பேடிட்டதை மாத்திரையிலேபின்னும்
　　சோதிருத்திவரி சாத்திரையிலே
அப்போதங்குள்ள மூலஸ்தானத்தை
　　அறிந்துகொள்ளாரோ சொல்லுமையா. கூங

அறிந்ததுண்டைய னுத்தரவால்பன்னி
　　ராண்டுக்கொருதர மாத்திரவர்
உரியசத்தமவு னங்கொண்டுசமர்
　　துகந்தடைந்தவர் கோடியுண்டு. கூச

கோடிபேருண்டென் றும் சொன்னவசேகந்தன்
　　கொலுவில்மகிமையும் சொன்னவரே
தேடிக்கொண்டாடும் கதிர்மலைமேல்கந்தன்
　　சேருன்வச்சேகர மெப்படிகாண். கூரு

சேகரமான மலைகளுண்டுசுத்தி
　　ரெண்டிருண்ட வனங்களுண்டு
ஏகமிருக சஞ்சாரமடிமலைக்
　　கிசைந்துபோனவ ரில்லையடி. கூசா

போனவரந்த மலைவளத்தைச்சொல்லி
　　புகழக்கேட்டே னதின்விதத்தை
ஆனலவரெப் படிப்போனார்போக
　　லாகாதென்றெவ்விதப் சொல்லுவீர் ஈண். கூஎ

ஆகாதென்றது மெய்தாண்டிமுரு
　　கையனுத்தரவி னல்தாண்டி
யேகினலைந்தக் கதிர்மலைக்கிவழி
　　யிசையத்தோனு மிருள்விலக்கி. கூஅ

யிசையுமநல்ல வழியுமென்றீர்முன்னே
　　யேகமிருகசஞ் சாரமென்றீர்
திசைக்கிச்செல்லாமல் தட்டிடுமோகண்டு
　　சேரும்ப வழி விட்டிடுமோ. கூகூ

விட்டுவிடாதது மெய்யதர்க்கேகதிர்
　　வேலவனுத்தர வானதர்க்கே
தட்டுப்படாது மிருகமெல்லாம்வனம்
　　தாண்டியேயேறி கடந்திடலாம். ௱

கடந்துகாணுவ தெந்தமலைகந்த
 நாதனிருப்பது மெந்தமலை
அடர்ந்தமௌனத் தொனிகளுண்டோயங்கே
 அண்டர்கள்கூட்ட மதிகமுண்டோ. ௱௧

அண்டர்கள்கூட்டமதிகமுண்டு அப்பால்
 ஆறுமுகன்சபையங்கேயுண்டு
கண்டாசைகொள்ளாத மானிடர்க்குசபை
 காணவுந்தோணுது தோழிப்பெண்ணே. ௱௨

தோணுதெனறது மெய்யவரும்பிருள்
 சூழ்ந்தவனங்கள் கடந்தவரும்
காணுதமாமலைக் கேறினவர்சபை
 கண்டுதொழாமல் வருவாரோ. ௱௩

கண்டுதொழுவ தெல்லாமலையுமெங்கள்
 கந்தனகனக சபைமலையே
தொண்டரல்லால்கண்ட பேருமில்லைஅங்கே
 தடிவயிரவன் காவலடி. ௱௪

காவல்கொண்டமலைச் சாரினிலேயெங்கள்
 கர்த்தன்பவனிப் பதியினிலே
மேவும்சமாதொன் றிருக்கிறதேயதை
 விளங்கச்சொல்லு மெனக்குமதை. ௱௫

சொல்லுவேன்கேளு திரைகடந்தயோகத்
 துரியாதீதத் துறைகடந்த
கல்லமுத்துலிங்க சுவாமிக்கடிமூர்த்தி
 ராசரால்கட்டிய கோவிலடி. ௱௬

கட்டியகோவில்ச் சிறந்ததிலேகதிர்
 காமம்சிவஸ்தல மானதிலே
முட்டிவணங்கி முறையதினென்கிற
 முழக்கமேயிங்கே சொல்லுமையா. ௱௭

முழக்கமான நபிவரத்தில்வந்து
 முத்தியடைந்தன ரித்தலத்தில்
வழக்கமாகமுசிலீன்கள்நிதம்
 வந்துவணங்குர் றின் சத்தமடி. ௱௮

தீனத்கூறிய மாபதியில்கல்லை
சித்திரவேலவன் சன்னதியில்
தானமும் தர்மமும செய்யவென்று அன்ன
சத்திரங்கட்டின தார்காணும். ௱௯

கட்டியமாமடம் செட்டியடிதர்மம்
கர்த்தரெனும் நகரத்தார்கள்
ஒட்டியபொதிகை யிட்டமைத்தார்புக
ழுசந்ததர்மம் மடம்சமைத்தார். ௱௰

உசந்ததர்மம் மிருத்தோர்கள்செல்வ
மோங்கும்வசிய குலத்தார்கள்
இசைந்துவந்த வரைத்தேடியன்னம்
ஈவதுமுண்டோ மனம்நாடி. ௱௧௧

நாடியதர்மம் மிகக்கொடுத்துகந்த
நாதன்கதிரேசன் வேலெடுத்து
ஆடித்திருவிழா நாளையிலேயிவ
ராண்டுக்கொருதரம் வாறதுண்டு. ௱௧௨

வாறதுண்டுநக ரத்தார்களென்று
மன்னவரேசொன்னீ ரின்னகரில்
ஆறுமுகன்கதி ரேசனுக்கியிது
ஆடித்திருவிழா முக்கியமோ. ௱௧௩

முக்கியமாய்க்கதிர் காமத்தாலேசுற்றி
முக்கோணசக்கர வீதியிலே
சக்கரபாணி மருகரெனும்கந்த
சாமிதிருவிழாக் கூட்டமடி. ௱௧௪

கூட்டமும்பாட்டமும் கொண்டாடும்குடை
கொடிவிருதுகள் நின்றாடும்
நாட்டமுடைய திருநாளில்நிதம்
நடக்குகின்ற வளமையென்ன. ௱௰௫

வளமைவேழத்தின் மேல்மிகுந்துகந்தன்
மாணிக்கப்பேழை தனிலுகந்து
கலைதுலங்கிய வீதியிலேவரும்
கந்தன்பவனியைப் பாருங்கடி. ௱௰௬

கந்தனுக்கேற்ற திருநாளிலிந்தக்
காசினிமேலோரும் வரும்நாளில்
செந்தமிழோர்களும் கொண்டாடக்கந்தன்
தேருமேலேறுவ தென்றைக்கையா. ௱௰௭

தேருமேலேறும் வளமையில்லைச்சித்திர
தேருமிழுப்பது மிங்கேயில்லை
சேருடன்தண்டிகை மீதேறிசுவாமி
நீறுப்பானதைப் பாருங்கடி. ௱௰௮

நீறுப்பென்றதும் தோன்றலையேயிப்போ
நீர்சொன்னபாஷை விளங்கிலையே
தேருமின்னாட்டு வளமைகளோயிதைச
சீருடனேசொல்ல வேணுமையா. ௱௰௯

சீருள்ளமாணிக்க கெங்கையிலேசுவாமி
தீர்த்தங்கொடுத்தருள் செய்கையிலே
சேருள்ளசிங்களப் பாஷையிலேயிதை
நீறுரைப்பேனென்பதும் மெய்தாண்டி. ௱௨௰

மெய்யான ஆறு முகவரெனும்சுவாமி
மேவியவள்ளி தெய்வானையனும்
தையலர்மேவும் கதிர்காமந்தனை
தான்கண்டபேருக்கு முத்தியுண்டோ. ௱௨௰௧

முத்தியுண்டினைத் தானுமடிதவ
முத்தர்புகழ்கதிர் காமம்வந்தால்
சித்தியுமுத்தியு முண்டாகும்பணி
சேராதருள்வார் முருகேசன. ௱௨௰௨

கேசவன்தன்னரு மைக்குரியவள்ளிக்
கிசைந்தகந்தன் புகழ்புரிய
வாசமிருந்த தமிழதனைச்சொன்ன
மன்னவரே யுமக்கெந்தவூரு. ௱௨௰௩

மன்னர்புகழ்ராம நாதபுரம்சேது
மானகராம் திருப்புல்லாணி
கன்னயமாகிய ஊர்தாண்டிதங்கம்
ராமசாமியெந்தன் பேர்தாண்டி. ௱௨௰௪

பேரையுமூரையு மேபுகழ்ந்துசொன்ன
பேர்பெற்றமானகர் மீதிருந்து
தாருலவுங்கதிர் காமத்துக்கேகீரும்
தானிங்கேவந்த வயணமென்ன. ௱உ௫

வந்துகொழும்பத னில்ச்சிறந்துவெகு
வாவமதாச்சில நாளிருந்து
கந்தன்பவனியைக் கண்ணாலேகண்டு
கைதொழுதேத்தவும் வந்தேனடி. ௱உ௬

கைதொழுதேற்றிய மெய்வாசனம்ம
கந்தன்கதிரை முருகேசன்
தெய்வயானைவள்ளி மணாளனுமேலினி
செந்தமிழால்துதி சொல்லுமையா. ௱உ௭

சொல்லசொல்லிக் கேட்டவர்க்குவரும்
துன்பமகற்றுமிப்பாடவாக்கும்
தில்லையெல்லைவல்லத் தாண்டவத்தாள்வாலை
தேவிசிவகாமி யின்தவத்தால். ௱உ௮

அருள்பொருந்திய பூவரசன்வள்ளி
யம்மைதெய்வானைக் கதிரேசன்
திருவிழாவிற் சிறந்தவராம்கந்தன்
தீர்த்தங்கொடுத்தருள் தந்தவராம். ௱உ௯

தீராதநோய்களை தீர்த்தவண்டிசுவாமி
சித்தம்வைத்தும்மைக் காத்தவண்டி
நாரணனுக்கு மருகனிவன்ஜெக
நாதன்செந்தூரு முருகனிவன். ௱௩௰

தேவசேனாதி பதிதாண்டிகூவும்
சித்திரச்சேவல்க் கொடியாண்டி
மூவர்புகழ்கந்தன் சன்னதியில்நின்று
முழங்கக்கும்மி யடியுங்கடி. ௱௩௧

சிம்மாசனத்தி லிருந்தவரைவளம்
சேர்கதிர்காம முகந்தவரை
பிம்மானிலத்தவர் போற்றியேஅவ
ரெண்ணிவந்தபடி நேத்தியே. ௱௩௨

செலுத்தும்வேடிக்கை பாருங்கடிகந்தன்
தீபதெரிசனம் பாருங்கடி
தலத்தில்முக்கியம் மெத்தவடிகந்த
சாமிக்குசிங்காரம் நித்தமடி. ௱௩௩

முப்பத்துமுக்கோடி தேவருக்குநல்ல
மூவருக்கும்புவி யாவருக்கும்
நாற்பத்தெண்ணாயிரம் தானவர்க்கும்தரு
நாவலர்க்கும் திசை நாவலர்க்கும். ௱௩௪

சிங்காரக்கும்மி தழ்ச்செறக்கும்நம்ம
செங்கைவேலன் கதிரேசனுக்கும்
மங்கையர்வள்ளி தெய்வானையர்க்கும்ஜெய
மங்களம்வாழி மிகவாழி. ௱௩௫

சித்திரவேலா யுதம்வாழிகந்தன்
சேவல்மயிலு மிகவாழி
சத்தியருள்கந்தன் சன்னதியில்புகழ்
சாமியிடும்பனும் வாழியதாம். ௱௩௬

கதிர்காமக் கும்மி

முற்றிற்று.

உ

சிவமயம்.

மங்களம்.

ஆதியாம்பரஞ் சோதிக்கும் அபிராமிக்கும்
ஜெயமங்களம்

மாதுவள்ளி தெய்வானைக்கும் வடிவேலர்க்கும்
சுபமங்களம்

திருவுக்கும் திருமாலுக்கும் தெய்வதேவர்க்கும்
ஜெயமங்களம்

குருவுக்கும் குமரேசர்க்கும் குறமாதுக்கும்
சுபமங்களம்

மாலருள்பிர்ம தேவர்க்கும் கலைமாதுக்கும்
ஜெயமங்களம்

அலைசூழ்கதிர் காமம்வாழி முருகையர்க்கும்
சுபமங்களம்

செந்தமிழ்க்கவி யாளர்க்கும் புவியாளர்க்கும்
ஜெயமங்களம்

கந்தனறு முகன்வேல் முருகையர்க்கும்
சுபமங்களம்.

மங்களம் - முற்றிற்று.
